සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2021

ஆசிரியர் : ஏ.எம். சனூஸ்

அறிவுத்தாரகை 5
ARIVUTHTHARAHAI

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL, 2021

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2021

மாதிரி வினாத்தாள் 1

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

வினாத்தாள் - I இற்கான புள்ளித்திட்டம்

1.	3	**11.**	28	**21.**	53	**31.**	78
2.	5	**12.**	30	**22.**	55	**32.**	80
3.	8	**13.**	33	**23.**	58	**33.**	83
4.	10	**14.**	35	**24.**	60	**34.**	85
5.	13	**15.**	38	**25.**	63	**35.**	88
6.	15	**16.**	40	**26.**	65	**36.**	90
7.	18	**17.**	43	**27.**	68	**37.**	93
8.	20	**18.**	45	**28.**	70	**38.**	95
9.	23	**19.**	48	**29.**	73	**39.**	98
10.	25	**20.**	50	**30.**	75	**40.**	100

85 - 100 மிக நன்று ☐

75 - 85 நன்று ☐

75 கீழ் - அதிகம் முயற்சிக்கவும் ☐

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.kcdu.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L


76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk


● **1, 2** ஆகிய வினாக்களில் பொருத்தமற்ற உருவைத் தெரிவு செய்க.

1.



(1) (2) (3)

2.



(1) (2) (3)

3. பின்வரும் உருவில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

4. பின்வரும் உருக்களில் உள்ள போத்தல்களைப் பார்க்க.




A B C D

இவ் போத்தல்களை ஒரு குறித்த இயல்பு தொடர்பாக ஒழுங்குபடுத்தி வைத்தால் கிடைக்கத்தக்க விடை யாது?

(1) CADB (2) BADC (3) DCBA

5. வெற்றிடத்துக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.




(1)

(2)

(3)

சுட்டெண் : .....

6. 

இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 7 (2) 8 (3) 9

● **7, 8** ஆகிய வினாக்களில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

7. ஆசிரியருக்கு மாணவன் போன்று மருத்துவருக்கு .....

(1) பொதுமக்கள் (2) நோயாளி (3) தாதி

8. மீனவனுக்கு கடல் போன்று விளையாடுபவனுக்கு .....

(1) மைதானம் (2) பந்து (3) துடுப்பு


9. ஒவ்வொரு பாத்தியிலும் ஒருவகை மாத்திரம் இருக்கத்தக்கதாக ஐந்து பாத்திகளில் மரக்கறிப் பயிர்களும் பூச்செடிகளும் வளர்க்கப்படுகின்றன. பூச்செடிகள் வளர்க்கப்படும் பாத்திகளின் எண்ணிக்கை இரண்டு ஆகும். மரக்கறிப் பயிர்களும் பூச்செடிகளும் இருக்கத்தக்க விதத்தைத் தெரிவு செய்க.


(1) றோசா, செவ்வந்தி, முள்ளங்கி, அவரை, கோவா

(2) றோசா, செவ்வந்தி, அந்தூரியம், முள்ளங்கி, அவரை

(3) றோசா, முள்ளங்கி, அவரை, கோவா, கரட்


● **10, 11** ஆகிய வினாக்களுக்குப் பின்வரும் அடைப்பில் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி விடையைத் தெரிவு செய்க.





10.  எதற்குச் சமம்?

(1) 1000ml (2) 1500ml (3) 2000ml

11. பின்வருவனவற்றில் மிகவும் சரியான தொடர்பு யாது?

(1) 

(2) 

(3) 

www.ikeau.lk

12. ஒரு வீதியில் இரு மின்கம்பங்களுக்கிடையே 3 கொடிகள் வீதம் தொங்கவிட்டு அவ்வீதியை அலங்கரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. வீதியில் 10 மின்கம்பங்கள் இருந்தால், அவற்றுக்கிடையே தொங்கவிடுவதற்கு எத்தனை கொடிகள் தேவை?

(1) 27 (2) 30 (3) 33

13. ஒரு பேருந்தில் உள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கை அதில் உள்ள பெண் பயணிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். அடுத்த தரிப்பிடத்தில் 6 பெண்கள் பேருந்தில் ஏறிய பின்னர் ஆண்களின் எண்ணிக்கையையும் பெண்களின் எண்ணிக்கையும் சமமாகும். இப்போது பேருந்தில் உள்ள பயணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 9 (2) 12 (3) 18

14. 2020ஆம் ஆண்டில் 366 நாட்களும் 2021ஆம் ஆண்டில் 365 நாட்களும் உள்ளன. 2020ஆம் ஆண்டு சனவரி 1ஆந் தேதி புதன் கிழமையாகும். 2021ஆம் ஆண்டு சனவரி 1ஆந் தேதி வெள்ளிக்கிழமையாகும். இதற்கேற்ப 2022ஆம் ஆண்டு சனவரி 1ஆந் தேதி?

(1) வெள்ளிக்கிழமை (2) சனிக்கிழமை (3) திங்கட்கிழமை

15. ஐந்து திங்கட்கிழமைகள் உள்ள ஓர் செப்டம்பர் மாதத்தில் உள்ள ஞாயிற்றுக் கிழமைகளின் தேதிகளின் மொத்தத்திற்கு இருக்கத்தக்க உயர்ந்த பட்சப் பெறுமானம்?

(1) 75 (2) 80 (3) 85

16. கடலில் நிதமும் இருப்பவை.

(1) அலைகளும் மீன்களும் (2) மீன்களும் நீரும் (3) நீரும் உப்புச் சுவையும்

17. ஒரு சொல்லில் நிதமும் இருப்பவை.

(1) எழுத்துக்களும் கருத்தும்
(2) கருத்தும் அச்சுப் பிழைகளும்
(3) இகரக் குறியும், உகரக் குறியும்

18. கீதா பணக்கார வீட்டுப் பிள்ளை. அவள் சிறுவர் சஞ்சிகைகள், சித்திரக் கதைகள் எனப்பலவற்றைப் பாடசாலைக்குக் கொண்டு வருவாள். அவற்றை ஏனைய மாணவர்களுக்குக் காட்டுவாள். ஆனாலும், யாருக்கும் வாசிக்கக் கொடுக்கமாட்டாள். அவளைப் பற்றிக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமானது,

(1) உலோபி (2) சுயநலவாதி (3) வள்ளல்

19. கருணாகரனின் ஒரே பிள்ளையாகிய வரதன் பாடசாலைக்குத் தாமதமாக வந்து, தம்பியுடன் கடைக்குச் சென்று திரும்பி வருவதற்குத் தாமதம் ஏற்பட்டதெனக் கூறினான். இது உண்மையாக இருக்கலாம். இதற்குக் காரணம்?

(1) வரதன் உலாவித் திரிய விரும்புகின்றமை.
(2) வரதனுக்குச் சில சகோதரர்களும் சகோதரிகளும் இருக்கின்றமை.
(3) வரதனின் சிறிய தகப்பனாரின் ஒரு மகனும் வரதனின் வீட்டில் இருக்கின்றமை.

● **20, 21** ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள கூற்றைப் பற்றிய சரியான முடிவைத் தெரிவு செய்க.

20. முயன்றால் வெற்றியீட்டலாம்.

(1) இது எப்போதும் உண்மையாகும்.
(2) இது பெரும்பாலும் உண்மையாகும்.
(3) இது ஒருபோதும் உண்மையானதன்று.

www.lkedu.lk

21. பாடசாலைப் பேருந்து நேரந்தவறாமல் பாடசாலைக்கு வருகின்றது.

(1) இது பெரும்பாலும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.


(2) இது ஒருபோதும் நடைபெறுவதில்லை.

(3) இது எப்போதும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.


22. கதிரை, மேசை, தளபாடங்கள் என்பவற்றுக்கிடையிலான தொடர்பினைக் காட்டுவதற்கு வரையப்பட்டுள்ள உருவைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)

23. ஒரு பரீட்சையில் சீதா ராஜாவை விட கூடிய புள்ளிகளைப் பெற்றாள். விமலை விட சீதா குறைந்த புள்ளிகளைப் பெற்றாள். எனின்,

(1) மிகக் கூடிய புள்ளிகளை சீதா பெற்றுள்ளாள்.

(2) விமலும் சீதாவும் சமமான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

(3) ராஜாவிலும் விமல் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளான்.

● **24** தொடக்கம் **26** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் பந்தியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதனுடன் தொடர்புபட்டவை. வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

ஞாயிற்றுக் கிழமை காலை .....(1)..... எழுதலாம். என்று அமர்ந்தான். அப்போது சுரேஷ் வந்துவிட்டான். சுரேஷ் அவனது நெருங்கிய நண்பன். அவனோடு .....(2)..... வேலையைத் தொடங்கினான். எப்படி வரைவதென்று யோசித்த போது அவனது மற்றொரு .....(3)..... குமாரின் நினைவு வந்தது. குமாரின் அப்பா மிகப் பெரிய ஓவியர். அவரிடம் யோசனை கேட்கலாம் என்று நினைத்தான். அவனது நண்பனுடன் குமாரின் வீட்டுக்கு புறப்பட்டான். குமாரின் தந்தை வீட்டில் இல்லை. மாலைதான் வருவார் என்று குமார் கூறினான்.

24. முதலாவது புள்ளிக் கோடிடப்பட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்.

(1) கடிதம் (2) ஓவியம் (3) கவிதை

25. இரண்டாவது புள்ளிக் கோடிடப்பட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்.

(1) விளையாடி விட்டு (2) உணவருந்தி விட்டு (3) உரையாடி விட்டு

26. மூன்றாவது புள்ளிக் கோடிடப்பட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்.

(1) நண்பன் (2) சகோதரன் (3) மாணவன்

27. சாருலதா திங்கட்கிழமை குறித்தவொரு தொகைப் பணத்தை உண்டியலில் வைப்புச் செய்தாள். அப்பணம் அதற்கு அடுத்துவரும் ஒவ்வொரு நாட்களிலும் இரண்டு மடங்காக அதிகரித்துச் சென்றது. ஞாயிற்றுக்கிழமை உண்டியலில் உள்ள பணத்தைப் பார்த்த போது 320 ரூபாயாக இருந்தது. எனின், அவள் திங்கட்கிழமை வைப்புச் செய்த பணம் எவ்வளவு?

(1) 5 ரூபாய் (2) 10 ரூபாய் (3) 15 ரூபாய்

28. 1 தொடக்கம் 100 வரை எண்களை எழுதும் போது, இலக்கம் '9' எழுதப்படும் தடவைகள் எத்தனை?

(1) 11 (2) 19 (3) 20

www.ikedu.lk

● பின்வரும் கவிதையைக் கொண்டு **29, 30** ஆகிய வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.

நல்லறிவான தலைமுறை தோன்றிட - அனைவர்க்கும்
நம்மரசு தந்திடும் ஏட்டினை
இளையோர் நாம் சகோதர்களுக்காய் - பண்பாய்ப் பேணி
பாதுகாத்திடுவோம் நன்றாய்.


29. இங்கு ஏடு எனக் குறிப்பிடப்படுவது?

(1) கல்வி (2) நூல் (3) நூலகம்

30. கவிதையின் மூலம் வெளிப்படுத்தப்படுவது?

(1) நாம் நூலகத்தை பாதுகாக்க வேண்டும்.
(2) ஏட்டினைப் பாதுகாத்து ஆசிரியர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.
(3) பாடநூல்களைச் சிறப்பாகப் பேணி அடுத்துவரும் மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.


31. ஒரு சதுரமுகியின் மூன்று தோற்றங்கள் கீழே காணப்படுகின்றன.



■ இற்கு எதிரே இருக்கும் உரு யாது?

(1) ●● (2) ▮ (3) O

32.




உருவில் ஒத்த மரக்குற்றிகளைக் கொண்டு உருவாக்கிய அடைப்பு காட்டப்பட்டுள்ளது. இந்த அடைப்புக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள மரக்குற்றிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 21 (2) 24 (3) 27

33. '**அறிவுத்தாரகை**' என்னும் சொல்லைக் கொண்டு ஆக்கக்கூடிய உயிரெழுத்துச் சொல்?

(1) அறிவு (2) தாரகை (3) கை

● பின்வரும் தொடர்புகளில் ஒவ்வோர் உருவிற்கும் ஒரு பெறுமானம் உண்டு. அதற்கேற்ப **34, 35** ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக.



○ + △ = 8


△ – ○ = 4

◇ + ○ = 5

www.lkedu.lk




34.  இன் பெறுமதி யாது?


(1) 6 (2) 4 (3) 2

35.  இன் பெறுமானம் யாது?


(1) 9 (2) 10 (3) 12

● **36, 37** ஆகிய வினாக்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

36.  இற்கு  எனின்,  இற்கு .....






(1)



(2)




(3)


37.  இற்கு  எனின்,  இற்கு .....



(1)



(2)



(3)

38. விஜயன் மோகனின் தந்தையாவார். மயூரன் விஜயனின் தம்பி ஆவார். கீதா மோகனின் ஒரே தங்கை ஆவார். கீதாவும் மயூரனும் சந்திக்கும் போது கீதா என்ன உறவுமுறையைக் கூறிக்கொண்டு மயூரனுடன் பேசுவார்?

(1) சித்தப்பா (2) பெரியப்பா (3) மாமா

39. வீட்டிலிருந்து பாடசாலைக்குச் சென்று மீண்டும் வீட்டிற்கு வருவதற்கு உள்ள மொத்தத் தூரம் 48 கிலோமீற்றர் ஆகும். வீட்டிற்கும் பாடசாலைக்கும் சரிநடுவில் வைத்தியசாலை உள்ளது. வீட்டிற்கும் பாடசாலைக்கும் இடையே உள்ள தூரம் யாது?

(1) 24 கிலோமீற்றர் (2) 18 கிலோமீற்றர் (3) 12 கிலோமீற்றர்

www.ikedu.lk

40. கீதா 5 நிமிடங்களில் 10 பூமாலைகளையும் மாலா 10 நிமிடங்களில் 5 பூமாலைகளையும் செய்து முடிப்பர். இவர்கள் இருவரும் 20 நிமிடங்களில் எத்தனை பூமாலைகளைச் செய்து முடிப்பர்?

(1) 50 (2) 40 (3) 30

- *** -

www.lkedu.lk



LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk || www.lkedu.lk
76667-4945



සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2021

ஆசிரியர் : ஏ.எம். சஹ்ரஸ்

அறிவுத்தாரகை 5
ARIVUTHTHARAHAI

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL, 2021

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2021

மாதிரி வினாத்தாள் 1

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களில் உப பகுதிகள் உள்ளன.)
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **கோட்டினை மாத்திரம் இடுக.**
* மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

வினாத்தாள் - IIஇற்கான புள்ளித்திட்டம்

1.	6	11.	2	21.	2
2.	2	12.	2	22.	2,1
3.	2	13.	2	23.	2
4.	1	14.	1	24.	2
5.	2	15.	1	25.	4
6.	1	16.	2	26.	2
7.	2	17.	2	27.	2
8.	1	18.	2	28.	2
9.	2	19.	2	29.	4
10.	1	20.	2, 1	30-59	30

85 - 100 மிக நன்று

75 - 85 நன்று

75 கீழ் - அதிகம் முயற்சிக்கவும்

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T/CH

www.ikeduk

[பக். 2 ஐப் பார்க்க

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

1. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டு மக்களின் கல்வியிற் தங்கியுள்ளது. அத்தகைய பெருமையை ஈட்டிக் கொடுப்பதற்குக் காரணமாக அமையும் நூல்களை நாம் கண்களைப் போன்று பேணிக்காப்பது எமது கடமையாகும். எனவே நூல் நிலையங்களில் உள்ள நூல்களைக் கிழிக்காமலும் சிதைக்காமலும் பக்குவமாகப் பயன்படுத்துவோம்.

● **பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.**

(i) ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டு மக்களின் எதில் தங்கியுள்ளது?

: .....

(ii) "சிறுமை" என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக?

: .....

(iii) **'கவனமாக'** என்ற கருத்தைத் தரும் சொல்லை எழுதுக?

: .....

(iv) பந்தியில் இடம்பெறும் உவமானம் யாது?

: .....

(v) தன்மை, பன்மை, எதிர்கால வினைச்சொல்லை எழுதுக?

: .....

(vi) பந்தியில் இடம்பெறும் மடக்கேறு மட்டும் இடம்பெறும் சொல் யாது?

: .....

2. பின்வரும் ஒவ்வொரு பழமொழியினதும் கருத்தை எழுதுக.

(i) ஆத்திரக் காரனுக்கு புத்தி மத்திமம்.

: .....

(ii) ஆழம் அறியாமல் காலை விடாதே.

: .....

3. அடைப்பில் உள்ள எழுத்துக்களிலிருந்து பொருத்தமான எழுத்தைத் தெரிவு செய்து பின்வரும் சொற்களைப் பூரணப்படுத்துக.

ன	ண	ல	ழ

(i) கி……ங்கு

(ii) விமா.....ம்

4. பின்வரும் வாக்கியத்தை பெண்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.

நண்பன் பாட்டுப் பாடினான்.

: .....

5. பொருத்தமான நிறுத்தக் குறியை இடுக.

(i) நன்றி கவிதா பொங்கல் மிகவும் சுவையாக உள்ளது

(ii) பிள்ளைகளே மகிழ்ச்சியுடன் சென்று வாருங்கள்

www.lkedu.lk

சுட்டெண் : .....

6. பின்வரும் சொற்களைப் பொருத்தமாக்கிக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

சேர்ந்தோம் / இரவுவேளை / மீண்டும் / பாடசாலையை / வந்து

: .....

.....

7. சரியான இரட்டைக்கிளவிச் சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) நீரோடை ..... என ஓடியது. (கலகல / சலசல)

(ii) கண்ணாடி ..... என மின்னியது. (பளபள / பலபல)

8. பின்வரும் தொடர்மொழிக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

ஒரே சமயத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தோன். : .....

9. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) (மகிள்ச்சி / மகிழ்ச்சி) (ii) (ஆராய்ச்சி / ஆராச்சி)

10. பின்வரும் சொல்லை சேர்த்தெழுதுக.

பனை + காய் : .....

11. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Spider : ..... (ii) Hen : .....

12. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(i) This is my .....





(ii) I like .....

13. (i) **பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

I am Hungry : .....

(ii) **பின்வரும் வாக்கியத்தை ஆங்கிலத்தில் கூறும் விதத்தை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

இவர் எனது தந்தை : .....

14. 'ஹத்தளிஹ' என்னும் சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

: .....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

வாருங்கள், சோறு சாப்பிடுங்கள் : .....

16. 'ஐம்பதாயிரத்து ஐந்து' என்னும் எண்ணை எண்குறியில் எழுதுக?

: .....

17. 245, 285, 292 ஆகிய எண்களுள் 3 இனால் மீதியின்றி வகுபடக் கூடிய எண்ணை எழுதுக?


: .....

www.lkedu.lk

18. | 4 | 2 |
| --- | --- |
| 1 | 6 |

கட்டத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு உருவாக்கக் கூடிய மிகப்பெரிய இரட்டை எண் யாது? : .....

19. உருவில் காணப்படும் சதுரத்தின் சமச்சீர் கோடுகளை வரைக.



20. சில நகரங்களுக்கிடையே உள்ள தூரங்கள் பின்வரும் உருவிலே கிலோமீற்றரில் தரப்பட்டுள்ளன.

		புத்தளம்
	கொழும்பு	142
காலி	116	258
மாத்தறை 45	161	303


(i) மாத்தறையிலிருந்து காலி கொழும்பு ஊடாகப் புத்தளத்திற்கு உள்ள தூரம் யாது?

: ..... கிலோமீற்றர்


(ii) காலியிலிருந்து புத்தளத்துக்கு உள்ள தூரம் எவ்வளவு?

: ..... கிலோமீற்றர்

21. பின்வரும் திண்மங்களைக் கொண்டு விடையை எழுதுக.



உரு A



உரு B

(i) உரு A இல் உள்ள திண்மத்திற்கு எத்தனை விளிம்புகள் உள்ளன?

: .....

(ii) உரு B இல் உள்ள திண்மத்தின் பெயர் யாது?

: .....

22. பின்வரும் விலைப்பட்டியலை அவதானித்து விடை எழுதுக?

வரைதல் புத்தகம்	-	25 ரூபாய்
வர்ணப்பெட்டி	-	15 ரூபாய் 50 சதம்

(i) 25 ரூபாய் விலையுள்ள ஒரு வரைதற் புத்தகத்தையும் 15 ரூபாய் 50 சதம் விலையுள்ள ஒரு வர்ணப்பெட்டியையும் வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?

: ..... ரூபாய் ..... சதம்

(ii) மேலே (i) இல் உள்ள பொருள்களை வாங்கி 100 ரூபாய் காசுத் தாள் ஒன்றினைக் கொடுக்கும் போது கிடைக்கும் மீதி யாது?

: ..... ரூபாய் ..... சதம்

www.ikedu.lk

23. ரவியின் தாயின் நிறை ரவியின் நிறையின் இரு மடங்காகும். தாயின் நிறை 65kg 300g எனின், ரவியின் நிறை யாது?

: ..... கிலோகிராம் ..... கிராம்

24. ஓர் நீர்த் தாங்கியில் உள்ள நீரில் 3l 250ml பயன்படுத்தப்பட்ட பின்னர், தாங்கியில் 1l 800ml நீர் எஞ்சியிருந்தது. எனின் ஆரம்பத்தில் நீர்த்தாங்கியில் இருந்த நீரின் கனவளவு யாது?

: ..... லீற்றர் ..... மில்லிலீற்றர்

25. முற்பகல் 7.30 இற்கு தொடங்கிய பாடசாலை பிற்பகல் 1.30 இற்கு முடிவுற்றது.


(i) பாடசாலை முடிவுற்ற நேரத்தை 24 மணித்தியால கடிகாரத்திற்கு ஏற்ப இலக்கங்களில் எழுதுக?

: .....

(ii) அன்றைய தினம் பாடசாலை நடைபெற்ற நேரம் எவ்வளவு?

: ..... மணித்தியாலம்

26.



(i) தரப்பட்ட உருவில் $\frac{3}{10}$ ஐ நிழற்றுக.

(ii) அதில் நிழற்றப்படாத பகுதியை தசம எண்ணாக எழுதுக?

: .....

27. ஒரு வர்த்தகர் ஒரு கொத்தில் 7 அந்தூரியம் மலர்கள் வீதம் 308 கொத்துகளை வாங்கினார்.

(i) அவர் வாங்கிய அந்தூரியம் மலர்களின் எண்ணிக்கை யாது?

: .....

(ii) அவர் அவற்றை நான்கு மலர்கள் வீதம் கொத்துகளாக்கினார். அவர் செய்த மலர்க் கொத்துகளின் எண்ணிக்கை யாது?

: .....

28. ஒரு நெற்களஞ்சியத்தில் 875 நெற்சாக்குகளை இட்டு வைக்கலாம். இப்போது அங்கு 580 நெற்சாக்குகள் உள்ளன. மேலும் எத்தனை நெற்சாக்குகளை அந்நெற்களஞ்சியத்தில் இடலாம்?

: .....

29. ஒரு பாடசாலையில் உள்ள மாணவர்களிடமிருந்து அவர்கள் மிகவும் விரும்பும் பழங்கள் பற்றிக் கேட்கப்பட்டுள்ள தகவல்கள் பின்வருமாறு.

பழவகை	மாணவர்களின் எண்ணிக்கை
மாம்பழம்	15
வாழைப்பழம்	30
கொய்யாப்பழம்	25
பப்பாசிப்பழம்	40
அன்னாசிப்பழம்	35

www.lkeou.lk

(i) கொய்யாப்பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க எத்தனை மாணவர்கள் பப்பாசிப்பழத்தைக் கூடுதலாக விரும்புகின்றனர்?

: .....

(ii) இந்த ஐந்து வகைப்பழங்களையும் விரும்பும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

● **30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. பின்வரும் பூக்களிடையே நறுமணம் வீசும் பூ.
(1) மல்லிகை (2) காட்டுமல்லிகை (3) வாடா மல்லிகை

31. பூக்களுக்குத் தீங்கு பயக்கும் பிராணி
(1) தேனீ (2) வண்டு (3) வண்ணத்துப்பூச்சி

32. வெண்டி இலையின் வடிவத்தை ஒத்த வடிவமுள்ள இலைகள் இல்லாத தாவரம்.
(1) ஈரப்பலா (2) ஆமணக்கு (3) வல்லாரை

33. தண்டில் காய்க்கும் தாவரம்
(1) எலுமிச்சை (2) விளிம்பி (3) லொவி

34. பின்வருவனவற்றுள் மாப்பொருள் மிக்கது?
(1) கரட் (2) பருப்பு (3) வற்றாளை

35. இந்தியா அமைந்திருப்பது இலங்கைக்கு,
(1) வடக்கே (2) தெற்கே (3) மேற்கே

36. சமைக்கும் போது மூடாமல் சமைக்க வேண்டிய உணவு?
(1) மரவள்ளி (2) இறைச்சி (3) மீன்

37. நாய் கடித்தால் முதலில் என்ன செய்ய வேண்டும்?
(1) கடித்த நாயைப் பிடித்து தண்டித்தல்
(2) கடித்த இடத்தை துணியால் கட்டுதல்
(3) கடித்த இடத்தைச் சவர்க்காரத்தினாலும் தூய நீரினாலும் கழுவிவிட வேண்டும்

38. மருத்துவரினால் நோயாளிக்கு விதிக்கப்படும் மருந்தைக் குடிப்பதற்கு முன்பாகக் கருத்திற் கொள்ள வேண்டிய முக்கிய விடயம்.
(1) மருந்தின் விலை
(2) ஒரு வேளைக்கு எடுக்க வேண்டிய அளவு
(3) மருந்தில் அடங்குபவை


39. கையில் ஒட்டிய பலாக்காய் பசையை நீக்குவதற்கு மிகவும் உகந்த பொருள்.
(1) மண்ணெண்ணெய் (2) சவர்க்காரம் (3) சுடுநீர்

40. விற்றமின் A குறைபாட்டினால் ஏற்படக்கூடிய நோய்களுள் ஒன்று,
(1) பசியின்மை (2) உடல் வளர்ச்சி குறைதல் (3) கண்பார்வை குறைவடைதல்

41. இலங்கையில் குறித்த பிரதேசத்தில் சூறாவளி ஏற்பட்டுள்ளது. அப்பிரதேசத்திலிருந்து மக்களை விரைவாக வெளியேறுமாறு அறிவுறுத்துவதற்கு மிகவும் உகந்த ஊடகம்.
(1) ஒலிபெருக்கி (2) தொலைக்காட்சி (3) வானொலி

www.lkedu.lk

42. மஞ்சள் நிறப்பின்னணியில் காணப்படும் இவ்வீதிச் சமிக்ஞை எதனைக் குறிப்பிடுகின்றது?



(1) படலையுடன் கூடிய புகையிரதக் கடவை வீதிக்கு முன்னால்
(2) பாதுகாப்பில்லாத புகையிரதக் கடவை வீதிக்கு முன்னால்
(3) வீதி எதிரே மூடப்பட்டுள்ளது

43. ஊசித்துளைக் கமராவின் ஊடாக தொலைவில் உள்ள பொருளைப் பார்க்கும் போது தோன்றும் விதம்?
(1) நேராக (2) தலைகீழாக (3) குறுக்காக

44. பிரசை ஒருவர் தனது நன்னடத்தைச் சான்றிதழ் ஒன்றைப் பெறுவதற்கு செல்ல வேண்டியது,
(1) பொலிஸ் நிலையம் (2) கிராம அலுவலரிடம் (3) பிரதேச செயலாளரிடம்

45. பின்வருவனவற்றுள் காற்றின் மூலம் தொழிற்படும் இசைக்கருவி


(1)


(2)



(3)


46. பூங்கன்றுகளில் பெரும்பாலும் எக்கிளைகளில் அதிக பூக்கள் பூக்கும்.
(1) கடும் நிழலான இடங்களில் இருக்கும் கிளைகளில்
(2) ஓரளவு சூரிய ஒளி கிடைக்கும் கிளைகளில்
(3) நேரடியாக சூரிய ஒளி கிடைக்கும் கிளைகளில்


47. அயடீன் சேர்க்கப்பட்ட உப்புப் பொதியில் பின்வரும் குறியீடு உள்ளது. இதன் கருத்து யாது?
(1) கழுவாமல் பயன்படுத்துக.
(2) வெந்நீரினால் மாத்திரம் கழுவுக.
(3) ஈரலிப்பு உள்ள இடத்தில் வைக்க வேண்டாம்.



48. தையல் முறைகளிடையே 'கம்பளித் தையல்' ஐக் காட்டும் உரு யாது?


(1)


(2)


(3)

49. மரக்குற்றியில் உருவத்தைச் செதுக்குவதற்கு தச்சன் பயன்படுத்தும் உபகரணம்.
(1) தட்டுப்பொள்ளு (2) துறப்பணம் (3) உளி

50. சமாதானத்தின் சின்னமாகக் கருதப்படுவது.
(1) வெண்புறா (2) வெள்ளை அன்னம் (3) வெள்ளைக் கொக்கு

51. மகாவலி கங்கை கடலுடன் சங்கமமாகும் இடத்திற்கு அண்மையில் அமைந்துள்ள நகரம்.
(1) திருகோணமலை (2) களனி (3) களுத்துறை

52.



அருகிலுள்ள கலைப்படைப்பின் பெயர் யாது?
(1) சந்திர வட்டக்கல்
(2) சீகிரிய ஓவியம்
(3) இசுறு முனிய காதலர் சிலை

www.lkedu.lk

53. கண்டிக் கால சந்திர வட்டக்கல்லில் காணக்கூடிய உருவும், பொலன்னறுவைக் கால சந்திரவட்டக் கல்லில் காண முடியாத உருவுமாகக் கருதக்கூடியது?

(1) எருது (2) யானை (3) குதிரை

54. கை மரத்தினூடாகச் செல்லும் துளையைத் துளைப்பதற்கு பயன்படும் உபகரணம்.

(1) திருகாணி செலுத்தி (2) சுத்தியலும் ஆணியும் (3) துறப்பணம்

55. பொலித்தீன் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

(1) கைவிடப்பட்ட உணவு உள்ள பொலித்தீனை உண்பதால் விலங்குகள் இறக்கின்றன.
(2) பொலித்தீனை எரிக்கும் போது வெளியேறும் நச்சுவாயு நோய்களை உண்டாக்குகின்றது.
(3) பொலித்தீன் விரைவாக உக்குவதற்கு மண் உதவுகின்றது.

56. இலங்கை அணியினர் உலகக் கிண்ண கோப்பையைக் கைப்பற்றியது எந்த விளையாட்டிலாகும்?

(1) எல்லே (2) கிரிக்கெட் (3) உதைப்பந்து

57. 

அருகிலுள்ள இரண்டு காந்தங்களையும் மேசைமீது வைத்து, ஒரு காந்தத்தின் ஒரு முனையை, மற்றைய காந்தத்தின் முனைக்கு அருகே கொண்டு செல்லும் போது நிகழக்கூடியது.

(1) கவரும் (2) தள்ளும் (3) எதுவும் நிகழாது

58. "ஆன கட்டி ஏலேலப்பாடி சேர் குழப்பி
அயிறு சம்பா ஏலேலப்படி நாத்து நட்டு" இது எவ்வகைப் பாடல்.

(1) வண்டிப்பாடல் (2) மீனவர் பாடல் (3) சேனைப்பாடல்

59. மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டில் படிமுறை நான்கு எது?

(1) பிரார்த்தனை (2) மனவுறுதி (3) உதிப்பு

60. மாணவன் ஒருவன் எழுதிய கட்டுரை ஒன்றின் முதற்பகுதி கீழே தரப்பட்டுள்ளது. அம்மாணவன் நிறுத்திய இடத்திலிருந்து ஆக்கபூர்வமான மூன்று வாக்கியங்களை எழுதி மீதிப்பகுதியை நிறைவு செய்யுங்கள். (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

"சில மாதங்களாகப் புவியின் மேற்பரப்பில் ஒரு மழைத்துளியும் விழவில்லை. கடும் வெப்பத்தின் விளைவாக நிலத்தில் வெடிப்புகள், கோடுகளாகக் காணப்பட்டன. ஆறுகள், குளம், குட்டைகள், கிணறுகள், தடாகங்கள் ஆகியன வற்றிப் போய் இருந்தன. கண்ணுக்குத் தெரியும் அளவிற்கு பச்சை நிறம் காணப்படவில்லை. என்ன ஆச்சரியம்! திடீரென்று இடி, மின்னலுடன் அடைமழை பொழியத் தொடங்கியது. .....

- .....
  .....
- .....
  .....
- .....
  .....

- * -**

www.ikedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2021

ஆசிரியர் : ஏ.எம். சனூஸ்

அறிவுத்தாரகை 5
ARIVUTHTHARAHAI

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL, 2021

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2021

மாதிரி வினாத்தாள் 2

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

வினாத்தாள் - I இற்கான புள்ளித்திட்டம்

1.	3	**11.**	28	**21.**	53	**31.**	78
2.	5	**12.**	30	**22.**	55	**32.**	80
3.	8	**13.**	33	**23.**	58	**33.**	83
4.	10	**14.**	35	**24.**	60	**34.**	85
5.	13	**15.**	38	**25.**	63	**35.**	88
6.	15	**16.**	40	**26.**	65	**36.**	90
7.	18	**17.**	43	**27.**	68	**37.**	93
8.	20	**18.**	45	**28.**	70	**38.**	95
9.	23	**19.**	48	**29.**	73	**39.**	98
10.	25	**20.**	50	**30.**	75	**40.**	100

85 - 100 மிக நன்று ☐

75 - 85 நன்று ☐

75 கீழ் - அதிகம் முயற்சிக்கவும் ☐

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.kedpi.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L


76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk


● **1, 2** ஆகிய வினாக்களில் முதல் உருவிற்கு சமமான உருவைத் தெரிவு செய்க.

1.



(1) (2) (3)


2.



(1) (2) (3)

● **3, 4** ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து விடை தருக.

3.




உருA உருB

A, B ஆகிய இரு உருக்களுக்குமிடையே எத்தனை வேறுபாடுகள் உள்ளன?

(1) 3 (2) 4 (3) 5

4.



உருC உருD

C, D ஆகிய இரு உருக்களுக்குமிடையே உள்ள வேறுபாடுகளின் எண்ணிக்கை?

(1) நான்கு (2) நான்கிலும் கூடவாகும் (3) நான்கிலும் குறைவாகும்

5. பசுத் தோல் போர்த்த புலி போல என்பதன் கருத்தைத் தரும் விடை யாது?

(1) பாதுகாக்க வேண்டியவரே அழித்தல்

(2) பயன்கருதி மாறுவேடம்


(3) பற்றற்ற தன்மை

www.lkedu.lk


சுட்டெண் : .....

● **6, 7** ஆகிய வினாக்களில் உள்ள கோலத்திற்கேற்ப அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

6.




.....




(1) (2) (3)

7.




.....



(1) (2) (3)


8. பின்வரும் உருக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள சமச்சீர் கோடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஒழுங்கில் அவ்வுருக்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.



A B C

(1) ACB (2) CAB (3) BCA

9. பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.



(1) 11 (2) 13 (3) 15

www.lkedu.lk

10.  என்னும் உருவைப் பயன்படுத்தி **கதிரை** என்னும் சொல்லும்  என்னும் உருவைப் பளன்படுத்தி **விரைக** என்னும் சொல்லும் எழுதப்பட்டிருந்தன. இதற்கு ஏற்ப **கவிதை** என்னும் சொல்லை உருக்களால் காட்டும் சரியான முறை யாது?

(1)  (2)  (3) 

11. பின்வரும் கலந்துரையாடலை வாசிக்க.

A - ஆ! மிகவும் அழகான சட்டை

B - ஆம். எனக்கு மிகவும் விருப்பம்.

C - உண்மையாகவா! இது புதியது ஒன்று அல்ல.


D - நீ இதை விரும்புகிறாயா?

E - ஆனாலும் இது மிகவும் அழகானது.


இதனை ஒழுங்குபடுத்தும்போது கிடைக்கும் சரியான விடை?

(1) ACDEB (2) ACDBE (3) ACEDB

12. வெற்றிடத்திற்குப் பொருத்தமான உரு யாது?




● **13, 14** ஆகிய வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள தரவுகளை அவதானித்து விடை தருக.



13.  இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

(1) 12 (2) 17 (3) 29

14.  இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?


(1) 17 (2) 29 (3) 58

15. தந்தையார் சோற்றையும் இறைச்சியையும் விரும்புகின்ற போதிலும் மீனை விரும்புவதில்லை. தாயார் மீனையும் சோற்றையும் விரும்புகின்ற போதிலும் இறைச்சியை விரும்புவதில்லை. நான் முட்டையும் சோற்றையும் விரும்புகின்றேன். நாம் மூவரும் விரும்பும் உணவு யாது?

(1) முட்டை (2) மீன் (3) சோறு

www.ikeju.lk

● **16, 17** ஆகிய வினாக்களுக்கு பின்வரும் சதுர அடைப்புக்களைக் கொண்டு விடையைத் தெரிவு செய்க. (ஒவ்வொரு கட்டமும் 1 சதுர சென்ரிமீற்றர் பரப்பளவுள்ள 9 சதுரங்களைக் கொண்டது.)



16. அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதி எத்தனை கட்டங்களுக்குச் சமனாகும்?
(1) 4 (2) $4\frac{1}{2}$ (3) 5

17. அதில் நிழற்றப்படாத பகுதி மொத்த சதுரக் கட்டங்களில் என்ன பின்னமாகும்?
(1) $\frac{3}{9}$ (2) $\frac{1}{2}$ (3) $\frac{3}{4}$

18. தற்போது தர்சினியின் வயது 12 ஆகும். அவளுடைய வயது சகோதரியின் வயதின் நான்கு மடங்காகும். தர்ஷினியின் வயது இன்னும் எத்தனை ஆண்டுகளில் சகோதரியின் வயதின் இரு மடங்காக இருக்கும்?
(1) 6 (2) 10 (3) 24

19. 51 தொடக்கம் 55 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் '5' எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?
(1) 4 (2) 5 (3) 6

20. 500 இன் அரைவாசியின் $\frac{1}{5}$ பங்குடன் 10ஐ பெருக்கும் போது கிடைக்கும் எண் யாது?
(1) 500 (2) 250 (3) 60

21. முரளி ரவிக்கு முன்னரே விளையாட்டு மைதானத்திற்கு வந்த அதே வேளை ரவிக்குப் பின்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். மோகன் ரவிக்குப் பின்னரே மைதானத்திற்கு வந்த அதேவேளை முரளிக்கு முன்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். கூடுதலான நேரம் மைதானத்தில் இருந்தவர் யார்?
(1) மோகன் (2) முரளி (3) ரவி

● **22, 23** ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள இரு வெற்றுக் கட்டங்களுக்கும் பொருத்தமான இரு கணிதச் செய்கைகளையும் முறையே தெரிவு செய்க.


22. 6 ☐ 6 = 40 ☐ 4
(1) +, – (2) x, – (3) x, ÷

23. 50 ☐ 10 = 80 ☐ 20
(1) +, – (2) ÷, + (3) –, +

24. குறித்த இரு எண்களுக்கு இடையிலான வித்தியாசம் 5 ஆகும். அவ்விரு எண்களினதும் கூட்டுத்தொகை வித்தியாசத்தின் 7 மடங்காகும். அவ்விரு எண்களும் எவை?
(1) 18, 13 (2) 20, 15 (3) 19, 14


25. குறித்த மாதமொன்றின் 2ஆம் நாள் திங்கட்கிழமையாகும். அம்மாதத்தில் வெள்ளிக்கிழமைகள் வரும் திகதிகள் எவை?
(1) 5, 12, 19, 26 (2) 6, 13, 20, 27 (3) 7, 14, 21, 28

www.ikedu.lk

26. 

அருகிலுள்ள சதுரத்தாளில் முறிகோடு வழியாக வெட்டும் போது கிடைக்கும் முக்கோணிகளின் எண்ணிக்கை எத்தனை?

(1) 4 (2) 6 (3) 8

27. 

அருகிலுள்ள தாயக்கட்டை முறையான தாயக்கட்டையாக அமையும் போது அதன் எதிர்ப்பக்கமாக அமையக்கூடிய எண்கள்?

(1) 3 - 4, 5 - 2, 6 - 1


(2) 3 - 2, 5 - 4, 6 - 1

(3) 3 - 4, 5 - 1, 6 - 2

28. அமலனின் அம்மாவிற்கு இரண்டு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண்பிள்ளையும் இருப்பதோடு அமலனுக்கு ஒரு பிள்ளையும், அவனது அக்காவிற்கு இரண்டு பிள்ளைகளும் உள்ளனர். எனின் இங்கு இடம்பெறும் நபர்கள் எத்தனை?


(1) 6 (2) 7 (3) 8

29. உருவில் காணப்படும் சதுரமுகி வடிவமுள்ள ஒரு திண்மத்தைப் புள்ளிக்கோடு வழியே வெட்டும் போது கிடைக்கும் முகத்தின் வடிவம் யாது?



(1) 

(2) 

(3) 

● **30, 31** ஆகிய வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள தகவலைக் கொண்டு விடையைக் காண்க.

பின்வரும் இரு ஆங்கிலச் சொற்களிலும் A, D, E, F, H என்னும் ஐந்து ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக 1, 2, 3, 4, 5 என்னும் இலக்கங்கள் (இதே ஒழுங்கின்றி) இடப்பட்டு, அவ்விலக்கங்கள் ஏறுவரிசையில் எழுதப்பட்டுள்ளன.

HEAD = 1235

FEED = 1134

30. எழுத்து E இற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது?

(1) 1 (2) 3 (3) 5

31. எழுத்து D இற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது?

(1) 1 (2) 3 (3) 5

32. பணம் இல்லாது கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு நண்பன் ஒருவன் தன்னிடமிருந்த பணத்தில் ஒரு பகுதியைக் கொடுத்தான். இந்நிகழ்வுடன் தொடர்புடைய பழமொழி?

(1) ஆசை வெட்கம் அறியாது.

(2) அன்பான சினேகிதனை ஆபத்தில் அறி.

(3) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.


www.lkedu.lk


● **33, 34** ஆகிய வினாக்களுக்கு பின்வரும் தரவினை அடிப்படையாகக் கொள்க.
சாரு, லதா ஆகிய இருவரினதும் நிறைகளினதும் கூட்டுத்தொகை 80kg எனவும், லதா, சீலா ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 84kg எனவும் சாரு, லதா, சீலா ஆகிய மூவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை 118kg எனவும் தரப்பட்டிருப்பின்,


33. சீலாவின் நிறை யாது?
(1) 34kg (2) 38kg (3) 46kg


34. சாரு, சீலா ஆகிய இருவரினதும் நிறைகளின் கூட்டுத்தொகை யாது?
(1) 80kg (2) 84kg (3) 72kg

35. தொடக்கத்தில் தரப்பட்டுள்ள பொருட்சோடியை மேலிருந்து நேராகப் பார்க்கும் போது அது தோன்றும் விதத்தைத் தெரிவு செய்க?




(1) 

(2) 

(3) 

36. ஆங்கில எழுத்துக்கள் உள்ள சில்லு நேர்கோடு வழியே முன்னோக்கி உருளும் போது சந்திக்கும் ? குறி இடப்பட்டுள்ள கூடுகளுக்குப் பொருத்தமான ஆங்கில எழுத்துக்கள் முறையே,



(1) E, B (2) F, B (3) F, A

37. பாடசாலையிலிருந்து மைதானத்திற்கு உள்ள தூரம் பாடசாலையிலிருந்து நூலகத்திற்குச் செல்லும் தூரத்தின் இரு மடங்காகும். மைதானத்திற்கும் பாடசாலைக்கும் நடுவில் நூலகம் அமையப்பெற்றுள்ளது. எனவே,
(1) பாடசாலையிலிருந்து மைதானத்திற்கும், நூலகத்திலிருந்து மைதானத்திற்கும் உள்ள தூரம் சமமாகும்.
(2) பாடசாலையிலிருந்து நூலகத்திற்கும், நூலகத்திலிருந்து மைதானத்திற்கும் உள்ள தூரம் சமமாகும்.
(3) விடையளிப்பதற்கு மேலும் தகவல் தேவைப்படுகின்றது.

38. வடக்குத் திசைக்கும் கிழக்குத் திசைக்கும் இடைப்பட்ட திசையின் நேர் எதிர்த்திசை யாது?
(1) வடமேற்கு (2) தென்கிழக்கு (3) தென்மேற்கு

www.ikedu.lk

● பின்வரும் தகவலைக் கொண்டு **39, 40** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

> நீர்கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் நாளை காலை ஆறுமணி முதல் நண்பகல் பன்னிரண்டு மணிவரை நீர்வெட்டு அமுலில் இருக்கும் என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது. பொதுமக்கள் முன்கூட்டியே நீரைச் சேமித்து வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
>
> - தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை -

39. மேலே கட்டத்தினுள் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் ஒரு,

(1) அறிவுறுத்தல் (2) விசேட அறிவித்தல் (3) அறிவித்தல்

40. மேற்படி நீர்கொழும்பு மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் நீர் வெட்டு எத்தனை மணித்தியாலங்கள் அமுலில் உள்ளது?

(1) 5 மணித்தியாலம் 30 நிமிடம்

(2) 6 மணித்தியாலம்

(3) 12 மணித்தியாலம்

- * -**

www.lkedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2021

ஆசிரியர் : ஏ.எம். சனூஸ்

அறிவுத்தாரகை 5
ARIVUTHTHARAHAI

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL, 2021

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2021

மாதிரி வினாத்தாள் 2

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களில் உப பகுதிகள் உள்ளன.)
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **கோட்டினை மாத்திரம் இடுக.**
* மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

வினாத்தாள் - IIஇற்கான புள்ளித்திட்டம்

1.	6	11.	2	21.	2
2.	2	12.	2	22.	2
3.	2	13.	1	23.	2
4.	2	14.	1	24.	2
5.	3	15.	1	25.	2
6.	2	16.	2	26.	2
7.	1	17.	2	27.	4
8.	2	18.	2	28.	2
9.	1	19.	2	29.	2
10.	2	20.	4	30-59	30

85 - 100 மிக நன்று ☐

75 - 85 நன்று ☐

75 கீழ் - அதிகம் முயற்சிக்கவும் ☐

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T/CH

www.ikeduk

[பக். 2 ஐப் பார்க்க

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

1. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

பழங்களில் பலவகை உண்டு. மா, பலா, வாழை ஆகிய முக்கனிகள் எமது நாட்டில் புகழ் பெற்றவை. அன்னாசி, தோடம்பழம், தக்காளி, திராட்சை, எலுமிச்சை, பப்பாளி, மாதுளை, முலாம்பழம், தர்பூசணி, விளாம்பழம் முதலிய பழங்களும் உள்ளன. பொதுவாகப் பழங்கள் எல்லாம் கீரைகளின் குணம் உடையன. கீரைகள் இரத்தத்தைத் தூய்மை செய்கின்றன. அது மட்டுமன்றி உணவை சமிபாடடையச் செய்வதில் உதவி புரிகின்றன. எனவே உணவுடன் பழங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு சேர்த்துக் கொண்டால் உடல் ஆரோக்கியத்துடன் நோயின்றி நீண்ட நாட்கள் வாழ முடியும்.

● **பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.**

(i) பந்தியில் குறிப்பிடப்படும் முக்கனிகள் எவை?

: .....

(ii) பொதுவாகப் பழங்கள் எல்லாம் எவற்றின் குணத்தை உடையதாக குறிப்பிடப்பட்டுள்ளது?

: .....

(iii) இரத்தத்தை தூய்மை செய்பவை எவை?

: .....

(iv) "சுத்தம்" என்ற கருத்தைத் தரும் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக?

: .....

(v) பந்தியில் அதிகமாக இடம்பெறும் நிறுத்தக் குறியை எழுதுக?

: .....

(vi) உடல் ஆரோக்கியத்துடன் நோயின்றி நீண்ட நாட்கள் வாழ என்ன செய்ய வேண்டும்?

: .....

2. அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.

(i) சிங்கத்தின் கர்ச்சனையைக் கேட்ட ஏனைய விலங்குகள் ஓடி ..... ந்தன. (ஒளி / ஒழி)

(ii) ..... உறக்கமின்றிப் பாடுபட்டு உழைத்த காரணத்தால் அவன் இன்று பணக்காரனாக இருக்கின்றான். (ஊன் / ஊண்)

3. (i) **பின்வரும் கருத்து வாக்கியத்தை ஒருமையாக மாற்றி எழுதுக.**

பறவைகள் ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளன.

: .....

(ii) **பின்வரும் வாக்கியத்தை பன்மையாக மாற்றி எழுதுக.**

நட்சத்திரம் வானில் மின்னுகின்றது.

: .....

4. பின்வரும் ஒவ்வொரு கருத்தும் குறிக்கும் மரபுத் தொடரினை எழுதுக.

(i) பிறரை மகிழ்விக்க அவர் கருத்துப்படி நடத்தல்

: .....

(ii) அறிவு உண்டாதல்

: .....

www.ikeou.lk

சுட்டெண் : .....

5. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.

(i) ஒரு தண்டிலே பல மலர்கள் மலர்ந்துள்ள பூங்கொத்து

: .....

(ii) மற்றவர்களைப் பற்றி அக்கறை இல்லாதவன்

: .....

(iii) வீண் செலவு செய்பவன்

: .....

6. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

(i) எவ்வளவு பெரிய மலை

(ii) காலையில் எழுந்தவுடன் செய்ய வேண்டியவை யாவை

7. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.

குளம் / ஆகியவற்றில் / கழிவுகளை / ஆறு / மாசு / இடும்போது / குட்டை / அடையும் / நீர்வளம்

: .....

.....

8. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

(i) ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

: .....

(ii) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

: .....

9. கீழே தரப்பட்ட பாடலில் உள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால்

வழி ஓடிப் புல்லுக்கு ஆங்கே பொசியுமாம் தொல் உலகில்

நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு

: .....

10. (i) கர்ஜிக்கும் சிங்கம் என்பது போல, ஊளையிடும் .....

(ii) அகவும் மயில் என்பது போல, கூவும் .....

11. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Birthday : .....

(ii) Foot ball : .....

12. பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலப் பெயருக்கும் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

(i) Nose (i)  (ii) 

(ii) Parrot (i)  (ii) 

www.lkedu.lk

13. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

Where do you live ?

: .....

14. 'கன்ன' எனும் சிங்களச் சொல்லின் தமிழ்க் கருத்தை எழுதுக.

: .....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

நூலகம் எங்கே? : .....

16.

6	0
5	9

காட்டப்பட்டுள்ள இலக்க அட்டைகள் நான்கையும் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகப் பெரிய எண் யாது?

: .....

17. 

உருவில் ஒரு சிக்னல் பற்பசை பெட்டி காணப்படுகின்றது.

(i) அதன் விளிம்புகளின் எண்ணிக்கையை உரோம எண் குறியில் எழுதுக?

: .....


(ii) சதுர முகங்களின் எண்ணிக்கை யாது?

: .....

18. 1546 ஐயும் 2823 ஐயும் கூட்டுக? : .....

19. 6045 இலிருந்து 350ஐக் கழிக்க : .....

20. ஓர் ஆரம்பப் பாடசாலைக்குப் பிள்ளைகள் வரும் வாகனங்கள் பற்றிய தகவல்கள் வரைபில் காணப்படுகின்றன.



(i) வானிலும் முச்சக்கர வண்டியிலும் வரும் மாணவர்களின் எண்ணிக்கைகளுக்கிடையே உள்ள வித்தியாசம் யாது ? : .....


(ii) வேறு விதங்களில் வரும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 55 எனக் காணப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கையை வரைபில் கூறிய நிரலில் குறித்து நிரலை நிழற்றுக. (பென்சிலால் அல்லது பேனையால்)

21. ஒரு பாத்திரத்தில் இருந்த பாலின் அளவு 2*l* 250 *ml* ஆகும். அதனுடன் மேலும் 1*l* 500 *ml* பால் சேர்க்கப்பட்டது. இப்போது பாத்திரத்திலுள்ள பாலின் மொத்த அளவு யாது?

: ..... லீற்றர் ..... மில்லி லீற்றர்

www.ikedu.lk

22. வழங்கப்பட்டுள்ள சதுரக் கோட்டுப்படம் சமபகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன் மொத்தப் பரப்பளவில் 0.4 பகுதியை நிழற்றுக.



23. 87 ரூபாய் விலையுள்ள நிறப் பென்சில் பெட்டியையும் 63 ரூபாய் விலையுள்ள ஒரு பயிற்சிப் புத்தகத்தையும் வாங்குவதற்கு என்னிடம் 100 ரூபாய் உள்ளது. மேலும் எவ்வளவு பணம் தேவைப்படும்?

: .....

24. ஒரு மாணவனுக்கு நான்கு விசுக்கோத்துகள் வீதம் ஒரு சுற்றுலாவில் பங்கு பற்றும் 94 மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கு எத்தனை விசுக்கோத்துக்கள் தேவை?

: .....

25. ஒரு வாங்கில் மூன்று பிள்ளைகள் அமரலாம். 420 பிள்ளைகள் அமருவதற்கு அத்தகைய எத்தனை வாங்குகள் தேவை?

: .....

26. மு.ப. 4.20 இற்குப் படிக்கத் தொடங்கிய அண்ணா 2 மணித்தியாலங்கள் 50 நிமிடங்களின் பின்னர் படிப்பை நிறுத்தினார். படிப்பை நிறுத்திய நேரம் யாது?

: .....

27. பிரதி செய்து விடை எழுதுக.

(i)

	m	cm
	33	44
+	91	61

(ii)

	kg	g
	10	50
-	5	75

28. சூரியன் உதிக்கும் திசைக்கு எதிர்த்திசையை எழுதுக?

: .....

29. ஒரு நாடகத்திற்கான நுழைவுச் சீட்டுக்களை விற்றதன் மூலம் மோகன் சேகரித்த பணம் ரூ.1525 ஆகும். கண்ணன் சேகரித்த பணம் மோகன் சேகரித்த பணத்திலும் பார்க்க ரூ.175 இனால் கூடியது. கமலா சேகரித்த பணம் மோகன் சேகரித்த பணத்திலும் பார்க்க ரூ.175 இனால் குறைவானது மூவரும் சேகரித்த மொத்தப் பணம் யாது? : ..... ரூபாய்

- **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. பின்வரும் பூக்களில் மாலை நேரத்தில் மலரும் பூ

(1) அந்திமந்தாரை (2) நந்தியா வட்டை (3) அல்லி

31. இரவில் திரியும் பறவை?

(1) சாக்குருவி (2) இரட்டைச் சொண்டுக்குருவி (3) மரங்கொத்தி

www.lkedu.lk

32. பழச் செய்கைக்குப் பெரும்பாலும் தீங்கு விளைவிக்கும் பிராணி

(1) கரப்பான் (2) சிலந்தி (3) வெண்மூட்டுப்பூச்சி

33. பறக்க முடியாத பறவையாக அமையக் கூடியது.

(1) கிளி (2) கிவி (3) கோழி

34. பயிர்களை வளர்ப்பதற்கு பயன்படுத்தப்படும் மாற்று முறைச்சாடி **ஒன்றல்லாதது**?

(1) பழைய டயர் (2) தென்னம் பொச்சி (3) கிழிந்த ஆடை

35. உடல், உளச் சுகத்திற்கான செயற்பாடுகளில் மூன்றாம் படிமுறைக்கு அடுத்தது யாது?

(1) உதிப்பு (2) பிரார்த்தனை (3) மனவுறுதி

36. உடலுக்கு சக்தி தருவதில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும் உணவுச் சோடி

(1) பயறும் சோயா அவரையும்

(2) இடியப்பமும் நெல்லரிசிச் சோறும்

(3) முட்டையும் பிட்டும்

37. சோறு சமைப்பதற்காக அரிசியைக் களைவதற்கு மிகப் பொருத்தமான பாத்திரம்

(1) அரிக்கஞ்சட்டி (2) சுளகு (3) பெரிய மட்பானை

38. இலங்கையில் முதன்முதலில் அமைக்கப்பட்ட குளம்

(1) திசாவாவி (2) கிரித்தலைக் குளம் (3) பசவக்குளம்

39. இக்குறியீடு குறிப்பது



(1) நொருங்கக்கூடியது

(2) இப்பக்கம் மேலே

(3) ஈரப்பிலிருந்து பாதுகாக்கலாம்

40. வீட்டுத்தோட்டத்தில் பயிர்ச்செய்கைக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் வருவதைத் தடுப்பதற்கு வளர்க்கப்படும் தாவரம்

(1) துளசி (2) செவ்வந்தி (3) காவட்டம் புல்

41. கஞ்சி தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் இலை வகை,

(1) கோப்பை இலை (2) சிறுநாரத்தை இலை (3) புளியிலை

42. இலங்கையில் ஒரே மாகாணத்திலிருந்து இரு பிரதான ஆறுகள் கடலுக்குள்ளே பாய்கின்றன. அவை

(1) களனி கங்கை, வளவை கங்கை

(2) நில்வள கங்கை, களுகங்கை

(3) களனி கங்கை, களுகங்கை

43. அதிவேக பாதையைக் குறிப்பதற்கு தேசப்படத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள நிறம் யாது?

(1) சிவப்பு (2) ஊதா (3) மஞ்சள்

44. இலங்கை அரசாங்க இலச்சினையில் சூரியன் சந்திரன் குறிப்பது.

(1) தார்மீகம் (2) தன்னிறைவும் செழிப்பும் (3) நிலைத்திருப்பு

45. சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகம் தொடர்பான தகவல்களை அறிவிக்க அழைக்க வேண்டிய தொலைபேசி எண்?

(1) 1938 (2) 1929 (3) 1919

46. இந்நாட்டினுள்ளே பதிவுத்தபால் மூலம் கடிதத்தை அனுப்புவதற்கு குறைந்த பட்சம் எவ்வளவு பெறுமானமுள்ள முத்திரை தேவைப்படும்?

(1) ரூ. 30 (2) ரூ. 35 (3) ரூ. 45

www.lkedu.lk

47. தகரப்பேணியில் அடைக்கப்பட்ட டின் மீனை கொள்வனவு செய்யும் போது விசேடமாக கவனத்தில் கொள்ள வேண்டியது.

(1) அடைக்கப்பட்ட தேதி (2) காலாவதியாகும் தேதி (3) தரநிர்ணய இலச்சினை

48. 

உருவிலுள்ள பெரியார் யார்?

(1) சேர் டீ.பி. ஜயதிலக்க

(2) கலாநிதி ஆனந்த குமார சுவாமி

(3) கலாநிதி ரி.பி. ஜாயா

49. புல்லாங்குழலில் உள்ள துளைகளின் எண்ணிக்கை

(1) 6 (2) 7 (3) 8

50. உப்புத்தூள் விரைவாகக் கரைவது

(1) வெந்நீரில் (2) குளிர்நீரில் (3) தண்ணீரில்

51. சட்டகாந்தம் ஒன்றில் காணப்படும் முனைகள்

(1) வடமுனை, மேல்முனை (2) வடமுனை, கீழ்முனை (3) வடமுனை, தென்முனை

52. எரிந்து கொண்டிருக்கும் தணல் உள்ள நெருப்பில் காய்ந்த உப்புக் கட்டியை இடும் போது நடைபெறுவது

(1) உப்புக் கட்டி சத்தத்துடன் வெடித்தல்

(2) உப்புக்கட்டி எரிதல்

(3) உப்புக்கட்டி உருகுதல்

53. நாய் கடித்தால் முதலில் செய்யவேண்டியது

(1) கடித்த இடத்தை துணியினால் கட்டுதல்

(2) கடித்த இடத்தை சவர்க்காரமிட்டு சுத்தமான நீரினால் கழுவுதல்

(3) நோயாளியை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லல்

54. பின்வருவனவற்றுள் கிராமிய விளையாட்டு ஒன்றல்லாதது

(1) சடுகுடு (2) சில்லுக் கோடு (3) கிரிக்கெட்

55. 

அருகிலுள்ள உரு பித்தளைக் கரண்டியில் சிறிதளவு நீரை இட்டு மெழுகுவர்த்திச் சுவாலையில் பிடிக்கும் முறை காட்டப்பட்டுள்ளது. இதனால்

(1) நீர் ஆவியாகும்

(2) பித்தளைக் கரண்டி கரையும்

(3) நீரின் நிறம் மாறும்

56. நாம் உண்ணும் உணவின் எஞ்சிய பகுதிகளை இடுவதற்கு பொருத்தமான தொட்டியின் நிறம்

(1) சிவப்பு (2) செம்மஞ்சள் (3) பச்சை

57. நாளுக்கு நாள் வளர்ச்சியடையும் தாவரம்

(1) மூங்கில் (2) கரும்பு (3) அகத்தி

58. சுதந்திர இலங்கையின் தற்போதைய பிரதமர்

(1) கோத்தபாய ராஜபக்ச (2) ரணில் விக்ரமசிங்க (3) மஹிந்த ராஜபக்ச

59. சூரிய நமஸ்காரப் பயிற்சியின் நான்காம் கட்டத்தைக் காட்டும் உரு எது

(1) 

(2) 

(3) 

www.lkedu.lk

60. "இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்கொள்ள இருக்கும் நான்" இதனைத் தொடர்ந்து வரக்கூடிய கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இடம் பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

- .....

  .....

- .....

  .....

- .....

  .....

- * -**

www.lkedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2021

ஆசிரியர் : ஏ.எம். சனூஸ்

அறிவுத்தாரகை 5
ARIVUTHTHARAHAI

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL, 2021

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2021

மாதிரி வினாத்தாள் 3

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

வினாத்தாள் - I இற்கான புள்ளித்திட்டம்

1.	3	**11.**	28	**21.**	53	**31.**	78
2.	5	**12.**	30	**22.**	55	**32.**	80
3.	8	**13.**	33	**23.**	58	**33.**	83
4.	10	**14.**	35	**24.**	60	**34.**	85
5.	13	**15.**	38	**25.**	63	**35.**	88
6.	15	**16.**	40	**26.**	65	**36.**	90
7.	18	**17.**	43	**27.**	68	**37.**	93
8.	20	**18.**	45	**28.**	70	**38.**	95
9.	23	**19.**	48	**29.**	73	**39.**	98
10.	25	**20.**	50	**30.**	75	**40.**	100

85 - 100 மிக நன்று ☐

75 - 85 நன்று ☐

75 கீழ் - அதிகம் முயற்சிக்கவும் ☐

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

www.keedu.lk

[பக். 2 ஐப் பார்க்க



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English


76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

● 1, 2 ஆகிய வினாக்களுக்கு சோடிச் சொற்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.


1. இயற்கை - ஒளி



(1)




(2)




(3)

2. எரிபொருள் - பிரயாணம்



(1)




(2)




(3)

● 3, 4 ஆகிய வினாக்களில் குறைந்த தொடர்பு உள்ள உருச்சோடி இருக்கும் அடைப்பைத் தெரிவு செய்க.

3.



(1)




(2)




(3)


4.



(1)



(2)



(3)

● 5, 6 ஆகிய வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கவிதையைக் கொண்டு விடை எழுதுக.

சிறகடிக்கும் பறவைகளின் கீத ஒலி கேட்கும்
வீசும் தென்றல் காற்று உடலுக்கு குளிர்ச்சி தரும்.
மலரும் மலர்களோ எங்கும் மணம் பரப்பும்
அதிகாலைப் பொழுதோ இன்பம் ஊட்டும்.

5. கவிதையில் குறிப்பிடப்படுவது காலையில் வீசும் காற்று

(1) பறவைகளின் கீத ஒலியை கேட்கச் செய்யும் என்பதை
(2) உடலுக்கு குளிர்ச்சி தரும் என்பதை
(3) மலர்கள் மணம் பரப்பும் என்பதை

www.ikeduk

சுட்டெண் : .....

6. காலையில் நடைபெறும் ஆனால் கவிதையில் குறிப்பிடப்படாத ஒரு விடயம்

(1) குளிர்ச்சியான தென்றல் காற்று வீசும்

(2) நறுமணமுள்ள மலர்கள் மலருதல்

(3) ஒளி மெதுவாகப் பரவுதல்

7. இது ஒரு பொருள் அல்ல. இதைப் பார்க்க முடியாது. உணர முடியும். எல்லா இடங்களிலும் உண்டு. இது இல்லாவிட்டால் உயிர் வாழ முடியாது.
இதில் குறிப்பிடப்படுவது

(1) நிழல் (2) காற்று (3) தண்ணீர்

8.
$$\begin{array}{r} BCD \\ +\ BEE \\ \hline 489 \end{array}$$

அருகிலுள்ள எழுத்துக்களுக்கு 2, 3, 4, 5 ஆகிய எண்கள் ஏதோ ஓர் ஒழுங்கில் தரப்பட்டுள்ளன. இச்செய்கையில் C, E ஆகியன குறிக்கும் பெறுமானம் முறையே,


(1) 3, 4 (2) 5, 3 (3) 3, 5


9. 36cm நீளமான கம்பியொன்றை துளைத்து ஒரு செவ்வக வடிவம் செய்யப்படுகின்றது. இச்செவ்வகத்தின் மொத்த அகலம் 24cm ஆயின் இச்செவ்வகத்தின் ஒரு பக்க நீளம் யாது?

(1) 12cm (2) 9cm (3) 6cm

● **10, 11** ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் உள்ள இரு உருக்களையும் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.


10.






(1) (2) (3)

11.





(1) (2) (3)

www.lkedu.lk

12. என்னிடம் 5 ரூபா நாணயங்களும் 2 ரூபா நாணயங்களும் மொத்தமாக 20 நாணயங்கள் உள்ளன. அவற்றின் பெறுமதி 76 ரூபாய் ஆகும். என்னிடமுள்ள 5 ரூபாய் நாணயக்குற்றிகள் எத்தனை?

(1) 12 (2) 8 (3) 20

* **1** எனச் சொல்லும் போது ரூபாய் 1 ஐயம்
* **2** எனச் சொல்லும் போது ரூபாய் 2 ஐயும்
* **3** எனச் சொல்லும் போது ரூபாய் 5 ஐயும் உண்டியலில் இடவேண்டும்.
* **0** எனச் சொல்லும் போது உண்டியலில் உள்ள பணத்தில் ரூபாய் 1 ஐயும் ரூபாய் 2ஐயும் வெளியே எடுக்க வேண்டும்.

34. இதற்கேற்ப இறுதியில் உண்டியலில் எவ்வளவு பணம் இருக்கும்?

(1) ரூபாய் 21 (2) ரூபாய் 25 (3) ரூபாய் 31

35. இறுதியில் உண்டியலில் இருந்த ரூபாய் 2 உம் ரூபாய் 5 உம் முறையே,

(1) ரூபாய் 2 - 2, ரூபாய் 5 - 5


(2) ரூபாய் 2 - 5, ரூபாய் 5 - 5

(3) ரூபாய் 2 - 2, ரூபாய் 5 - 3


36. நாளொன்றின் கடிகார நேரமானது வடக்குத் திசையைக் காட்டக் கூடிய நேரம் யாது?

(1) காலை 5.30 (2) நண்பகல் 12.00 (3) இரவு 11.30


37. பின்வரும் சதுரக் கடதாசி மடிக்கப்பட்டு துளையிடப்பட்டுள்ள முறை காட்டப்பட்டுள்ளது.




C கடதாசியினை துளையிட்டு விரிக்கும் போது பெறப்படும் விடை?



(1)




(2)



(3)

www.ikedu.lk


● **38, 39** ஆகிய வினாக்களுக்கு உருக்களின் தொடர்பை அவதானித்து விடை தருக.



38. சரியான தொடர்பை தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 

39. சமமான பெறுமதியுள்ள உருக்கள் எவை?

(1) 

(2) 

(3) 

40. மூன்று வாகனங்கள் 150Km தூரத்தை கடந்து சென்ற விதம் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

வாகனம்	மணித்தியால கதி km	புறப்பட்ட நேரம்
ஆட்டோ	30 km	காலை 6.00
மோட்டார் சைக்கிள்	50 km	காலை 7.00
பேருந்து	60 km	காலை 8.00

மூன்று வாகனங்களும் சேர்விடத்தை அடைந்த நேர ஒழுங்கை சரியாகக் காட்டும் விடை

(1) ஆட்டோ - காலை 11.00, மோட்டார் சைக்கிள் - காலை 10.00, பேருந்து - காலை 10.30

(2) ஆட்டோ - காலை 10.00, மோட்டார் சைக்கிள் - நண்பகல் 12.00, பேருந்து - காலை 10.30

(3) ஆட்டோ - காலை 11.00, மோட்டார் சைக்கிள் - காலை 10.00, பேருந்து - காலை 11.00

- * -**

www.ikdu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2021

ஆசிரியர் : ஏ.எம். சனூஸ்

அறிவுத்தாரகை 5
ARIVUTHTHARAHAI

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL, 2021

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2021

மாதிரி வினாத்தாள்

5

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களில் உப பகுதிகள் உள்ளன.)
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **கோட்டினை மாத்திரம் இடுக.**
* மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

வினாத்தாள் - IIஇற்கான புள்ளித்திட்டம்

1.	6	11.	2	21.	2
2.	3	12.	2	22.	2
3.	1	13.	2	23.	2
4.	1	14.	1	24.	2
5.	2	15.	1	25.	2
6.	2	16.	2	26.	2
7.	2	17.	2	27.	4
8.	2	18.	2	28.	1, 2
9.	1	19.	2	29.	2
10.	3	20.	2	30-59	30

85 - 100 மிக நன்று ☐

75 - 85 நன்று ☐

75 கீழ் - அதிகம் முயற்சிக்கவும் ☐

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T/CH

www.ikeduk

[பக். 2 ஐப் பார்க்க

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

1. பின்வரும் பந்தியை வாசிக்கவும்.

மிக அதிகமான பரப்பளவில் மணல் மற்றும் மணக்குன்றுகள் நிறைந்த பகுதி பாலைவனம் எனப்படும். உலகின் மொத்தப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பாலைவனம் ஆகும். இது உயிரினங்கள் வாழ்வதற்கு மிகவும் கடினமான பகுதியாகும். இந்தப் பகுதிகளில் மணல், புழுதிப் புயல்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. இதன் காரணமாக மணற் குன்றுகள் உருவாகின்றன.

பாலைவனங்கள் ஆண்டுக்கு இருநூற்றைம்பது மில்லி மீற்றருக்குக் குறைவாக மழையைப் பெறுகின்றன. அதிக வறட்சியைப் தாங்கி வளரும் கள்ளி, பனை போன்ற சில தாவரங்கள் மட்டுமே இங்கு வளர்கின்றன. கங்காரு, எலி, ஆமை, சிலவகைப் பாம்புகள், பல்லிகள், ஒட்டகங்கள் போன்றவை பாலைவனச் சூழலைச் சமாளித்து உயிர்வாழும் உயிரினங்கள் ஆகும்.

● **பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.**

(i) மணல் மற்றும் மணக்குன்றுகள் நிறைந்த பகுதி எவ்வாறு அழைக்கப்படும்?

: .....

(ii) மணக்குன்றுகள் உருவாகுவதற்குரிய காரணம் யாது?

: .....

(iii) பாலைவனங்கள் ஆண்டுக்கு எவ்வளவு மழைவீழ்ச்சியைப் பெறுகின்றன?

: .....

(iv) பாலைவனச்சூழலில் வாழும் தாவரங்கள் எவை?

: .....

(v) பந்தியில் இடம்பெறும் நிகழ்கால பன்மை வினைச் சொல்லை எழுதுக?

: .....

(vi) உயிரினங்கள் என்பதைப் பிரித்து எழுதுக?

: .....

2. சரியான விடையைத் தெரிவு செய்து அவ்விடையின் கீழ்க் கோடிடுக.

(i) காலப்பெயரைக் காட்டும் சரியான சொல் யாது?
(1) கோடை (2) கதிர்காமம் (3) இனிப்பு

(ii) பொருட்பெயரைக் குறிக்கும் சரியான சொல் எது?
(1) நிலாவெளி (2) மார்கழி (3) பலகை

(iii) சினைப் பெயரைக் குறிக்கும் சரியான சொல் யாது?
(1) முத்திரை (2) இலைகள் (3) புத்தளம்

3. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

யாரை எதை எவற்றை என்ற வினாக்களைக் கேட்பதன் மூலம் செயப்படுபொருளை கண்டு பிடிக்கமுடியும்

4. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

அழகும் / மிகுந்த / உடையவள் / கமலா / நற்குணமும்

: .....

5. சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.

(I) அரநெறி / அறநெறி

(ii) துர்நாற்றம் / துர்நாத்தம்

www.ikedu.lk

சுட்டெண் : .....

6. பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

(i) அந்த தனவந்தர் ஏழைக் குடும்பத்தை கைதூக்கி விட்டார். இங்கு 'கைதூக்குதல்' என்ற மரபுத் தொடரின் கருத்து யாது?
(துன்பத்திலிருந்து காப்பாற்றுதல் / தமது கைகளை தூக்கி விடல்)

(ii) பின்வருவனவற்றுள் இணைமொழியாக அமையக் கூடியது?
(சின்னஞ்சிறு / மலையும் மடுவும்)

7. தொடர் மொழிக்குப் பொருத்தமான ஒரு மொழிச் சொல்லை எழுதுக?

(i) எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன்

: .....

(ii) கலை நிகழ்ச்சிகளை மேடையேறறுவதற்கு முன் சரி பிழை பார்த்து திருத்தும் நிகழ்வு

: .....

8. (i) ஆடு கடா என்பது போல் யானை

: .....

(ii) கழுதை கத்தும் என்பது போல் கரடி

: .....

9. ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றுக.

புயற்காற்றில் மரம் முறிந்து விழுந்தது.

: .....

10. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i) **வாகனங்கள்** அ.ஃறிணை ஒருமைப் பெயர்ச் சொல்லாகும். (.....)

(ii) **மீனவர்கள்** உயர்திணை பன்மைப் பெயர்ச் சொல்லாகும். (.....)

(iii) **கடிகாரம்** அ.ஃறிணை ஒருமைப் பெயர்ச் சொல்லாகும். (.....)

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

(i) Stand up : .....

(ii) Stop : .....

12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i) 

: .....

(ii) 

: .....

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களை சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) think / others / about / please : .....

(ii) I / country / my / love : .....

14. கீழே தரப்பட்டுள்ள சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.


மதுருவா : .....

www.ikedu.lk

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

சூரியன் உதிக்கிறது. : .....

16.



அருகில் எண் சட்டத்தில் வகை குறிக்கப்பட்டுள்ள எண்ணை இலக்கத்தில் எழுதுக?

: .....

17. 98999 + 1


அருகிலுள்ள பிரசினத்தை தீர்ப்பதன் மூலம் பெறப்படும் விடையை சொற்களில் எழுதுக?

: .....

18. தரப்பட்டுள்ள ஒவ்வோர் எண் கோலத்திலும் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக?

(i) 5,9,13,17, ..., 25 (ii) 180, 170, 161, ..., 146


19.



உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை தசம எண்ணாக தருக?

: .....

20.



அருகிலுள்ள கடிகாரம் சாதாரண நேரத்தைக் குறிக்கின்றது. இந்நேரத்தை இலக்கக் கடிகாரத்தில் முற்பகல் நேரமாக எழுதுக?

: .....

21. வர்த்தகர் ஒருவர் $\frac{1}{4}$ பங்கு பொருள்களை விற்ற பின்னர் 90 பொருள்கள் எஞ்சியிருந்தன. வர்த்தகரிடம் ஆரம்பத்தில் இருந்த மொத்தப் பொருள்கள் எத்தனை?

: .....

22. 898 மருந்து வில்லைகள் பக்கற் ஒன்றிக்கு 8 வில்லைகள் வீதம் பொதி செய்ய வேண்டியுள்ளது. எனில்,

(i) எத்தனை பைக்கற்றுகள் பொதி செய்யப்பட்டிருக்கும்?

: .....

(ii) மீதியாகவுள்ள மருந்து வில்லைகளுடன் மேலும் ஒரு பொதி செய்ய தேவைப்படும் மருந்து வில்லைகள் எத்தனை?

: .....

23. பேருந்து ஒன்று மட்டக்களப்பிலிருந்து பொலன்னறுவை நோக்கி 67km தூரம் சென்று அங்கிருந்து கொழும்புக்கு 180km தூரம் சென்று, மீண்டும் மட்டக்களப்புக்கு வந்தது. அப்பேருந்து பயணம் செய்த மொத்தத் தூரம் எவ்வளவு?

: .....

www.ikedu.lk


24. ஒரு கோப்பையில் 800ml நீர் உள்ளது. அதனுடன் 400ml நீர் ஊற்றப்பட்டது. இப்போது பாத்திரத்தில் உள்ள நீரின் அளவு யாது?

: .....

25. 2kg 500g தேயிலையில் இருந்து 250g தேயிலையை பாவனைக்கு எடுத்துவிட்டு மீதியை 250g பைக்கற்றுக்களாக பொதி செய்தால் கிடைக்கும் பொதிகள் எத்தனை?

: .....

26.



உருவில் (A) சதுரத்தின் சுற்றளவு யாது?

: .....

27. பின்வரும் சிட்டையைப் பார்த்து விடை எழுதுக.

பொருள்	1Kg இன் விலை	
	ரூபாய்	சதம்
தேயிலை	800	00
மாசி	350	00
சீனி	110	00
பால்மா	900	00


(i) 400g பால்மாவின் விலை யாது?

: .....

(ii) 500g தேயிலையையும் 1kg மாசியையும் வாங்கி 1000 ரூபாய் காசுத்தாளை வழங்கினால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

: .....

28. மாணவர் குழுவொன்று அதிகமாக விரும்பும் நிறங்கள் தொடர்பான தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளது.



(i) மஞ்சள் நிறத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை பச்சை நிறத்தையும் நீல நிறத்தையும் விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையின் அரைவாசி ஆகும். அதனை அட்டவணையில் குறிக்க?

(ii) மூலவர்ணங்களை விரும்பும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

www.lkedu.lk

29. அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு விடையளிக்குக.

இரு தோட்டங்களில் பறிக்கப்பட்ட தேங்காய்களின் விபரம் பின்வருமாறு.

தோட்டம்	ஜனவரி	பெப்ரவரி	மார்ச்
A	1575	1890	1725
B	986	1087	1520

(i) இரு தோட்டங்களிலும் கூடுதலாக பறிக்கப்பட்ட தேங்காய்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

(ii) மார்ச் மாதம் A தோட்டத்தில் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கையிலும் பார்க்க B தோட்டத்தில் ஜனவரி மாதத்தில் எவ்வளவு குறைவான தேங்காய்கள் பறிக்கப்பட்டுள்ளன?

: .....

● **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. ஆனி மாதம் பூக்கும் தாவரங்கள்
(1) இலுப்பை, கொன்றை (2) வாகை, விளா (3) பாலை, வீரை

31. பிராணிகளின் இருப்புக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய மனிதச் செயற்பாடுகளுள் ஒன்று.
(1) சேதனப் பசளையிடுதல் (2) மரங்களை வளர்த்தல் (3) தீ மூட்டுதல்

32. ஆடு, மாடு, மான், குரங்கு போன்ற பிராணிகள்
(1) வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளாகும்.
(2) தாவர பாகங்களை உணவாகக் கொள்ளும் பிராணிகளாகும்.
(3) இரவு வேளையில் சஞ்சரிக்கும் பிராணிகளாகும்.

33. ஔடதமாகப் பயன்படுத்தப்படும் தாவர வேர்ப் பகுதி
(1) வெட்டிவேர் (2) கறிவேப்பிலை (3) பொன்னாவரை

34. PHI எனப்படுபவர்,
(1) குடும்ப வைத்தியர் ஆவார்.
(2) மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஆவார்.
(3) பொதுச் சுகாதார பரிசோதகர் ஆவார்.

35. இலங்கையின் தேசிய குறியீடுகளைக் கொண்ட விடைத் தொகுதி,
(1) காட்டுக்கோழி, நீலோற்பலம், தர்மச்சக்கரம்
(2) தேசியக்கொடி, நாகமரம், சூரிய சந்திரன்
(3) நாகமரம், காட்டுக்கோழி, நீலோற்பலம்

36. காந்தம் காணப்படாத பொருள்
(1) வானொலி (2) செவிப்பண்ணி (3) மின்குமிழ்

37. நோய்க்காவியான ஆட்கள் மூலம் ஏற்படக்கூடிய நோய்?
(1) சின்னமுத்து (2) நீரிழிவு (3) கழிச்சல்

38. தரம் ஐந்தில் கல்வி கற்கும் சிறிதரன் தோற்றத்தில் பருத்த உடல் உடையவனாக காட்சியளித்தான். இதற்குக் காரணம்,
(1) அவன் குறித்த வேளையில் உணவு உண்ணாமை.
(2) அவன் மாப்பொருள் உணவுகள் அதிகம் உட்கொண்டமை.
(3) அவன் எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகள் அதிகளவில் உண்டமை.

39. நன்கு சூடாக்கப்பட்ட உலோகக் கரண்டி மீது நீர்த்துளியொன்றை இடும்போது நிகழமுடியாதது?
(1) நீர் குளிர்ச்சியடையும் (2) நீர் ஆவியாகும் (3) ஒலி எழும்

www.ikedu.lk

40. உணவை நீண்ட காலம் பேணுவதற்கு பயன்படுத்தப் பயன்படும் நவீன முறை,
(1) புகையூட்டல் (2) குளிரூட்டியில் வைத்தல் (3) உலர்த்துதல்

41. பின்வருவனவற்றுள் பாதுகாப்பற்ற சந்தர்ப்பமாக அமையாதது
(1) மின்னல் மின்னும் வேளையில் திறந்த வெளியில் சஞ்சரித்தல்
(2) புகையிரதம் வருவது தெரிந்தும் தண்டவாளத்தைக் கடத்தல்
(3) பாதையில் வலது புறத்தின் வழியே நடந்து செல்லல்

42. பொதுப் போக்குவரத்து சேவையைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் அனுகூலம்
(1) அதிக செலவு ஏற்படல்
(2) பாதுகாப்பு
(3) விரும்பிய இடத்தில் நிறுத்தமுடிதல்

43. வீட்டுத்தோட்டச் செய்கையில் இரசாயனப் பசளை பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய விளைவு
(1) நச்சுத் தன்மையற்ற உணவுப்பொருள் கிடைத்தல்
(2) உணவுப் பொருளுடன் நச்சுத்தன்மை சேர்தல்
(3) ஆரோக்கியமான போசனைப் பெறுமானமுள்ள உணவு கிடைத்தல்

44. தனியாகப் பயன்படுத்தும் பொருள்கள்
(1) கைக்குட்டை, தொலைபேசி
(2) தொலைக்காட்சி, துடைதுண்டு
(3) சீப்பு, பற்தூரிகை

45. நீரினால் பரவும் வித்துக்களைக் கொண்ட சோடி
(1) காசித்தும்பை – கடல்மா
(2) தேங்காய் - கடல் மா
(3) எண்ணெய் - மகோகனி

46. நன்றாக மூச்சு எடுத்து விடக்கூடிய சூழலை உருவாக்கிக் கொடுத்தல். இந்த முதலுதவியை பெறப் பொருத்தமானவர்
(1) மயக்கமடைந்த ஒருவர்
(2) பாம்பு தீண்டிய ஒருவர்
(3) தீக்காயங்களுக்கு உட்பட்ட ஒருவர்

47. நாம் பருகும் நீரின் இயல்புகளில் ஒன்று
(1) மணம் உண்டு (2) சுவை உண்டு (3) நிறமற்றது

48. முளைப்பதற்கு நீண்ட நாள் தேவைப்படும் வித்து
(1) சோளம் (2) கடுகு (3) தென்னை

49. திரவ பானங்களில் சீனியின் அளவை குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள நிறங்கள்
(1) சிவப்பு, பச்சை, நீலம் (2) சிவப்பு, பச்சை, மஞ்சள் (3) பச்சை, நீலம், ஊதா

50. ரூபாய் 45 பெறுமதியான முத்திரையிட்டு அனுப்பக்கூடிய பதிவுத் தபால் இடக்கூடிய பெட்டியின் நிறம்
(1) பச்சை (2) சிவப்பு (3) நீலம்

51. சுவர்களில் ஆணி அறைவதற்கும் கழற்றுவதற்கும் பயன்படும் கருவி



(1)



(2)




(3)


www.lkedu.lk


52. வானவில்லில் உள்ள நிறங்களின் எண்ணிக்கை
(1) 7 (2) 6 (3) 8

53. 
உருவிலுள்ள பெரியவர்
(1) வண. எஸ். மஹிந்த
(2) கொங்கால கொட பண்டா
(3) அநகாரீக தர்மபால

54. பின்வருவனவற்றுள் சோம்தையலைக் காட்டும் உரு,


(1)


(2)


(3)

55. சாந்தகப்பை மற்றும் தூக்குக்குண்டை பயன்படுத்துவோர்
(1) மீனவர் (2) தச்சர் (3) கொத்தர்

56. சமயலறையில் பயன்படக் கூடிய பொருள்


(1)


(2)


(3)

57. தகவல் பெற உதவும் அச்சு ஊடகம் ஒன்றல்லாதது
(1) பத்திரிகை (2) துண்டுப்பிரசுரம் (3) தொலைக்காட்சி

58. யோத கால்வாயை அமைத்த மன்னன்
(1) தாதுசேனன் (2) தேவநம்பிய தீசன் (3) வசப மன்னன்

59. 
அருகிலுள்ள இக்குறியீடு காணக்கூடிய இடம்
(1) பாடசாலை முன்பாக
(2) வைத்தியசாலை முன்பாக
(3) நீதிமன்றம் முன்பாக

60. 'நீண்ட நாள் பயணத்தடை பின்னராக நான் எனது குடும்பத்துடன் சென்று கழித்த உல்லாசப்பயணம்' எனும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

- .....
  .....
- .....
  .....
- .....
  .....

- * -**

www.lkedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2021

ஆசிரியர் : ஏ.எம். சனூஸ்

அறிவுத்தாரகை 5
ARIVUTHTHARAHAI

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL, 2021

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2021

மாதிரி வினாத்தாள் 6

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

வினாத்தாள் - I இற்கான புள்ளித்திட்டம்

1.	3	**11.**	28	**21.**	53	**31.**	78
2.	5	**12.**	30	**22.**	55	**32.**	80
3.	8	**13.**	33	**23.**	58	**33.**	83
4.	10	**14.**	35	**24.**	60	**34.**	85
5.	13	**15.**	38	**25.**	63	**35.**	88
6.	15	**16.**	40	**26.**	65	**36.**	90
7.	18	**17.**	43	**27.**	68	**37.**	93
8.	20	**18.**	45	**28.**	70	**38.**	95
9.	23	**19.**	48	**29.**	73	**39.**	98
10.	25	**20.**	50	**30.**	75	**40.**	100

85 - 100 மிக நன்று ☐

75 - 85 நன்று ☐

75 கீழ் - அதிகம் முயற்சிக்கவும் ☐

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

www.kcdu.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L


76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk


● **1, 2** ஆகிய வினாக்களில் முதலில் வரையப்பட்ட சித்திரத்துக்கு பெருமளவில் ஒத்த சித்திரத்தை தெரிவு செய்க.

1.



(1) (2) (3)

2.




(1) (2) (3)

3. கீழே தரப்பட்டுள்ள உருக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்கிளிலிருந்தும் வேறுபட்டுள்ளது. அவ்வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.




(1) (2) (3)


4. கீழே தரப்பட்டுள்ள உருக்களில் நேர்கோடுகள், வளைகோடுகள் இடம்பெறும் உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

5. கீழே தரப்பட்டுள்ள எண்களுக்கும் அவற்றைச் சுற்றி வரையப்பட்டுள்ள உருக்களுக்கும் ஏற்ப 30 ஐச் சுற்றி வரையப்படவேண்டிய உரு யாது?





(1) (2) (3)

www.ikeduk

சுட்டெண் : .....

6. கீழுள்ள கோலத்தில் செய்யவேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?

1	2	1	2	1	2	١	2	1	2	1	২	1	2
7	6	7	৩	7	6	7	6	٦	6	7	6	7	6

(1) 3 (2) 4 (3) 5

● ஒரு சிறிய சந்தையில் உள்ள விற்பனைக் கூடங்களின் மாதிரிப் படம் கீழே தரப்பட்டுள்ளது. அதனைக் கொண்டு **7, 8** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

சிறிய சந்தை - 2021			
(A) மரக்கறி	(B) ஆடை அணிகள்	(C) வீட்டு பிளாஸ்டிக் பொருள்கள்	(D) உலர் உணவுப் பொருள்

7. அரிசி, பருப்பு மற்றும் காய்கறிகள் ஆகியவற்றை வாங்குவதற்குச் செல்ல வேண்டிய விற்பனைக் கூடங்களின் எழுத்துக்கள் யாவை?

(1) (A) , (B) ஆகியன (2) (A), (C) ஆகியன (3) (D), (A) ஆகியன

8. சமயலறைக்கு தேவையான பொருள்களை கொள்வனவு செய்ய செல்ல வேண்டிய விற்பனைக்கூடம் அல்லாதது?

(1) (A) விற்பனைக்கூடம் (2) (B) விற்பனைக்கூடம் (3) (C) விற்பனைக்கூடம்

9. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தை தெரிவு செய்க.

(1) நாம் இறைவனை வழிபடுவேன்.
(2) நாம் இறைவணை வழிபடுவோம்.
(3) நாம் இறைவனை வழிபடுவோம்.

10. **'சத்தியாக்கிரகம்'** என்னும் சொல்லில் உள்ள சில எழுத்துக்களைக் கொண்டு ஆக்கத்தக்க கருத்துள்ள சொல்,


(1) தியாகம் (2) தியானம் (3) சீக்கிரம்

11. கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசிக்க.

ஐக்கிய நாடுகள் சபை ஏப்ரல் 23ஆந் திகதியை உலக புத்தக தினமாக அறிவித்துள்ளது. (1) தேவையானவற்றுள் முக்கியமானதொன்று புத்தகமாகும். நல்ல நூல்களே உற்ற (2) மற்றைய உயிரினங்களின் வாழ்க்கையில் தலைமுறைகள் மாறினாலும் வாழ்க்கை முறைகள் மாறாமல் தொடங்கிய இடத்திலிருந்தே மீண்டும் மீண்டும் தொடங்குகிறது. பந்தியில் (1) (2) ஆகிய இடங்களுக்கு மிகவும் பொருத்தமான சொற்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

(1) நமக்குத், வரலாறாக (2) நமக்குத், நண்பர்கள் (3) வாழ்க்கை, நண்பர்கள்

● **12, 13** ஆகிய வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள உருவைக் கருத்திற்கொண்டு விடை தருக.



www.ikedu.lk

12. a, d ஆகிய எழுத்துக்களினால் வகை குறிப்பிடத்தக்க உணவுகள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

(1) மரவள்ளி, கருவாடு (2) மரவள்ளி, சோயாஅவரை (3) மீன், வத்தாளை

13. மேலே உள்ள உருவில் முட்டை, சோயா அவரை ஆகியவற்றை வகை குறிப்பதற்கு முறையே பயன்படுத்தக்க எழுத்துச் சோடி இடமட்பெறும் விடை யாது?

(1) e, c (2) c, e (3) b, f

14. பிரித்தானியர் இலங்கை முழுவதையும் எந்த நூற்றாண்டில் எந்த தசாப்தத்தில் கைப்பற்றினர்?

(1) 18ஆம் நூற்றாண்டின் 2ஆம் தசாப்தத்தில்
(2) 19ஆம் நூற்றாண்டின் 1ஆம் தசாப்தத்தில்
(3) 19ஆம் நூற்றாண்டின் 2ஆம் தசாப்தத்தில்

15. அடுத்தடுத்துள்ள ஐந்து இலக்கங்களின் கூட்டுத்தொகை 175 ஆகும். அவ்வெண்களில் மத்தியில் வரும் எண் யாது?

(1) 34 (2) 35 (3) 36

16. ஒரு பாடசாலையில் வாணி விழாவின் தொடக்கத்தில் 15 மெழுகுவர்த்திகள் கொழுத்துவதற்குத் தயார் செய்யப்பட்டுள்ளது. ஒரு மெழுகுவர்த்தி ஒளிரும் நேரம் 20 நிமிடம் ஆகும். 15 மெழுகுவர்த்திகளை ஒரே தடவையில் கொழுத்தினால் அவை எல்லாம் எவ்வளவு நேரத்திற்கு ஒளிரும்?


(1) 15 நிமிடம் (2) 20 நிமிடம் (3) 300 நிமிடம்

17. ஓர் அரசாங்க பாடசாலையில் மூன்றாம் தவணைப் பரீட்சை நவம்பர் 15ஆந் திகதி புதன்கிழமை தொடங்கியது. நவம்பர் 20ஆந் திகதி பொது விடுமுறைத் தினமாகும். தவணைப்பரீட்சை 6 நாட்கள் நடைபெற்றது. தவணைப்பரீட்சை முடிவடைந்த நாள் யாது?


(1) புதன் கிழமை ஆகும்
(2) வியாழக்கிழமை ஆகும்
(3) வெள்ளிக்கிழமை ஆகும்

● **18, 19** ஆகிய வினாக்களில் உள்ள கோலத்திற்கேற்ப அடுத்துவரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

18.



: .....



(1) (2) (3)

19.

W ≤ M : .....

W ≥ ≤

(1) (2) (3)

www.ikeduk.lk

20. ஒரு கோழிப் பண்ணையில் உள்ள கோழிகளின் கண்களினதும் கால்களினதும் கூட்டுத்தொகை 160 ஆகும். அப்பண்ணையில் உள்ள கோழிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 80 (2) 60 (3) 40

● கீழே தரப்பட்டுள்ள செய்தித்தாள் அறிக்கையை வாசித்து **21, 22** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

இலங்கையின் இணையற்ற கலைப் பாரம்பரியத்தின் சின்னமாக சிகிரியா கருதப்படுகின்றது. இது மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள நகரத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது. 1144 அடி உயரமான இக்குன்றினுள் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சித்திரங்கள் பல உள்ளன. இவை 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே இக்கோட்டையைச் சுற்றி அகழியும் கட்டப்பட்டுள்ளது. சிகிரியா குன்றானது ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் பண்பாட்டு நிறுவனத்தால் (UNESCO) பாதுகாக்கப்பட வேண்டிய உலக பாரம்பரியக் களமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

21. சிகிரியாக் குன்று இருப்பது இலங்கையின்

(1) மத்திய மாகாணத்தில் ஆகும்.

(2) ஊவா மாகாணத்தில் ஆகும்.

(3) வடமத்திய மாகாணத்தில் ஆகும்.


22. பின்வருவற்றுள் இச்செய்தித்தாள் அறிக்கைக்கு மிகவும் பொருத்தமான தலைப்பு யாது?

(1) சிகிரியாக் குன்றின் சித்திரங்கள் பற்றிய தகவல்கள்

(2) சிகிரியாக் குன்றின் வரலாறு பற்றிய தகவல்கள்

(3) உலக பாரம்பரிய நிறுவனம் யுனஸ்கோ பற்றிய தகவல்கள்

23. A,B,C,D என்னும் ஒவ்வொரு முக்கோணியிலும் உள்ள மிகச் சிறிய இலக்கத்தைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகப்பெரிய எண் யாது?




(1) 3210

(2) 5321

(3) 8765

24. இங்கு தரப்பட்டுள்ள உருவில் எண்கள் ஒரு குறித்த கோலத்திற்கு ஏற்ப உள்ளன. இக்கோலத்திற்கு ஏற்ப ◯ இருக்கும் இடத்தில் இருக்க வேண்டிய எண் யாது?




(1) 21

(2) 13

(3) 11


25. பின்வரும் உருக்களில் உள்ள எண்கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.




(1) 36 (2) 40 (3) 41

www.ikedu.lk


26. முக்கோண வடிவம் உள்ள தாள் உரு (1) இல் காணப்படுகின்றது. அதன் நடுவில் ஒரு வட்டத் துவாரம் உள்ளது. உரு (2) இல் காணப்படுகின்ற முறிந்த கோடுகள் வழியே தாள் இரு தடவைகள் மடிக்கப்படுகின்றது. அதன் பின்னர் உரு (3) இல் உள்ளவாறு இரண்டாவதாக மடிக்கப்பட்ட விளிம்பில் துளை இடப்பட்டு அகற்றப்படுகின்றது.



உரு 1



உரு 2




உரு 3

தாளை முற்றாக விரிக்கும் போது காணத்தக்க துவாரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 2 (2) 3 (3) 4

27. இவ்வுருவில் உள்ள நாற்பக்கங்களின் மொத்த எண்ணிக்கை யாது?





(1) 6

(2) 8


(3) 10

28. பின்வரும் அடைப்பில் தரப்பட்டுள்ள எல்லாவற்றையும் முழுமையாகப் பயன்படுத்தி ஆக்கத்தக்க உருவைத் தெரிவு செய்க.






(1)



(2)



(3)

● கீழே தரப்பட்டுள்ள அறிவித்தற் பலகையைக் கொண்டு **29, 30** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

ஆயுர் வேத மருத்துவ நிலையம்

ஞாயிற்றுக்கிழமை தவிர வாரத்தின் ஒவ்வொரு நாளும்

மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப 1.00 மணி வரைக்கும்

பி.ப 2.00 தொடக்கம் பி.ப 5.00 வரைக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

29. மருத்துவர் நோயாளிகளுக்கு ஒரு வாரத்திற்குச் சிகிச்சை அளிப்பதற்கு எதிர்பார்க்கும் மணித்தியாலங்களின் மொத்த எண்ணிக்கை?

(1) 24 (2) 42 (3) 49

www.lkedu.lk


30. அறிவித்தற் பலகையில் குறிக்கப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப பின்வரும் எக்கூற்று சரியானது?

(1) நோயாளிகள் மருத்துவ நிலையத்தில் தங்கியிருந்து சிகிச்சையைப் பெறலாம்.

(2) மருத்துவர் தொற்று நோய்களுக்கு மாத்திரம் சிகிச்சையளிக்கின்றார்.

(3) மருத்துவர் மருந்துகளுக்காகப் பெரும்பாலும் தாவரப் பொருள்களைப் பயன்படுத்துகிறார்.

31. பின்வரும் பிரசினத்தை ஒழுங்கு முறைப்படுத்தும்போது பெறப்படும் சரியான ஒழுங்குமுறை.



(1) ACBD (2) ABCD (3) DCBA

32. ஒரு பேருந்தில் இருவர் வீதம் 12 பயணி ஆசனங்களும் மூவர் வீதம் அமரத்தக்க 10 பயணி ஆசனங்களும் மற்றும் ஆறு பயணிகள் அமரத்தக்க ஒரு பயணி ஆசனமும் உள்ளது. அப்பேருந்தில் அமர்ந்து செல்லத்தக்க பயணிகளின் மிகவும் கூடிய எண்ணிக்கை யாது?

(1) 54 (2) 48 (3) 60

33. 20 விரலுப்பழங்களினதும் 10 கொய்யாப்பழங்களினதும் நிறை 1500 கிராம் ஆகும். அதற்கேற்ப 4 விரலுப்பழங்களினதும் 2 கொய்யாப்பழங்களினதும் நிறை எவ்வளவு?

(1) 300 கிராம் (2) 400 கிராம் (3) 500 கிராம்


34. 90 தொடக்கம் 120 வரை எண்களை எழுதும் போது "0" எத்தனை தடவைகள் எழுதப்பட வேண்டும்?

(1) 4 (2) 14 (3) 12

35. நீளம், அகலம், உயரம் ஆகியன 6cm வீதம் உள்ள மரச் சதுரமுகியிலிருந்து நீளம், அகலம், உயரம் ஆகியன 2cm வீதம் உள்ள எத்தனை சிறிய சதுர முகிகளை வெட்டலாம்?

(1) 18 (2) 27 (3) 9

36. ஒரு கலை விழாவில் இடம்பெற்ற நிகழ்ச்சிகள் 1, 2, 3, 4 என்னும் நிகழ்ச்சிகள் தொடங்கிய நேரங்கள் கீழே உள்ள கடிகார முகங்களில் காணப்படுகின்றன.




① ② ③ ④

ஒரு நிகழ்ச்சி முடிவடைந்தவுடன் அடுத்த நிகழ்ச்சி ஆரம்பமாகியது. நிகழ்ச்சி 4 ஆனது பிற்பகல் 1.15 இற்கு முடிவடைந்தது. கூடுதலான நேரம் நடைபெற்ற நிகழ்ச்சி யாது?

(1) ① (2) ② (3) ③

www.ikeou.lk

37. கீழே மூன்று சதுரமுகிகளின் உரு காணப்படுகின்றன. அதன் முகங்களில் எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. எதிர்முகங்களில் இருக்கும் எண்களுக்கிடையே ஒரு தொடர்பை இனங்காணலாம். அத்தொடர்பைத் தெரிவு செய்க.




(1) எதிர்ப்பக்கங்களின் கூட்டுத்தொகை ஓர் இரட்டை எண் ஆகும்.

(2) எதிர்பக்கங்களின் கூட்டுத்தொகை 33 ஆகும்.

(3) மூன்று சதுரமுகிகளிலும் இலக்கம் 12 காணப்படுவதுடன் அதன் எதிர்ப்பக்க எண் 19 ஆகும்.

38. பின்வரும் மூன்று சித்திரங்களில் கை எடுக்காமல் வரையக் கூடிய சித்திரத்தை தெரிவுசெய்க.



(1) (2) (3)

39. ஒரு தாயக்கட்டை மூன்று முறை சுண்டிவிடப்பட்டது. அதன்போது விழுந்த எண்களின் ஆகக்கூடிய கூட்டுத்தொகையாக அமையக் கூடியது?

(1) 16 (2) 17 (3) 20

40. ○ + □ = ⬡ , □ - ○ = ⬠ ஆகும் கீழே தரப்பட்டுள்ள எத்தொடர்பு சரியானது?

(1) ⬡ + ⬠ = □ □

(2) □ - ⬠ = ⬡

(3) ⬡ ÷ ⬠ = ○

- * -**

www.ikedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2021

ஆசிரியர் : ஏ.எம். சனூஸ்

அறிவுத்தாரகை 5
ARIVUTHTHARAHAI

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL, 2021

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2021

மாதிரி வினாத்தாள்

6

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களில் உப பகுதிகள் உள்ளன.)
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **கோட்டினை மாத்திரம் இடுக.**
* மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

வினாத்தாள் - IIஇற்கான புள்ளித்திட்டம்

1.	6	11.	2	21.	2
2.	2	12.	2	22.	2
3.	4	13.	1	23.	2
4.	1	14.	1	24.	2
5.	1	15.	1	25.	4
6.	1	16.	2	26.	2
7.	2	17.	2	27.	2
8.	1	18.	2	28.	2
9.	1	19.	2	29.	2
10.	1	20.	2	30-59	30

85 - 100 மிக நன்று

75 - 85 நன்று

75 கீழ் - அதிகம் முயற்சிக்கவும்

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T/CH

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

1. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

சூரியனுக்கும் உழவுத் தொழிலுக்கும் நன்றி செலுத்தும் முகமாக இந்துக்கள் தைப்பொங்கல் பண்டிகையை கொண்டாடுவார்கள். அன்றைய தினம் வீட்டைச் சுத்தப்படுத்தி வாசலில் கோலம் போடுவர். மாவிலை தோரணம், மலர்மாலை என்பவற்றால் வீட்டை அலங்கரிப்பர். வீட்டிலுள்ள அனைவரும் குளித்துப் புத்தாடை அணிவார்கள்.

புதுப்பானையில் பாலை இட்டுப் பொங்க வைத்து பயறு கலந்த அரிசியைப் பொங்கல் பானையில் போட்டு சிறிது நேரத்தில் சர்க்கரை இடுவர். பொங்கல் பொங்கியதும் பழம், பாக்கு, வெற்றிலை, கரும்பு, இளநீர் என்பவற்றுடன் பொங்கலைச் சூரியனுக்குப் படைத்து வணங்குவர். அயலவர்களுக்கு பொங்கலுடன் வடை, முறுக்கு, லட்டுப் போன்ற சிற்றுண்டிகளையும் கொடுப்பார்கள்.

● **பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.**

(i) இந்துக்கள் தைப்பொங்கல் பண்டிகையை எதற்காக கொண்டாடுகிறார்கள்?

: .....

(ii) வீட்டை எவற்றால் அலங்கரிப்பார்கள்?

: .....

(iii) பொங்கலுடன் எவற்றைச் சேர்த்து சூரியனுக்குப் படைத்து வணங்குவர்?

: .....

(iv) 'வெல்லம்' என்ற கருத்தைத் தரும் சொல்லை எழுதுக?

: .....

(v) பந்தியில் இடம்பெறும் சிற்றுண்டி உணவு வகை எவை?

: .....

(vi) 'புத்தாடை' என்பதைப் பிரித்து எழுதுக?

: .....

2. சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) தன்னம்பிக்கை / தண் நம்பிக்கை

(ii) நூல்கள் / நூள்கள்

3. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) ..... (என் / உன்) பேனையை எனக்குத் தருவாயா?

(ii) தம்பியும் தங்கையும் பாடசாலைக்குச் ..... (சென்றோம் / சென்றார்கள்)

(iii) பறவை வானில் பறந்து ..... (செல்லும் / சென்றன)

(iv) பூக்கள் ..... (மலர்ந்தது / மலர்ந்தன)

4. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.

புகையிலை நாற்று என்பது போல பனை : .....

www.lkedu.lk

சுட்டெண் : .....

5. கீழே தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் பொருத்தமான சொல்லை எழுதி பழமொழியைப் பூரணப்படுத்துக.

..... இல்லாத தேர் முச்சாணும் ஓடாது.

6. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச் சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

நெடுங்காலம் வாழ்பவன் ..... (தீர்க்கதரிசி / சிரஞ்சீவி)

7. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க கோடிடுக.

(i) ஆற்று நீர் ..... (மலமல / சலசல) வென்று ஓடிச் சென்றது.

(ii) இருபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா .....
(வெள்ளி விழா / பொன்விழா) ஆகும்.

(iii) நான் பாடம் படித்தேன். இங்கு நான் என்பது .....
(தன்மை ஒருமை / முன்னிலை ஒருமை) என்பதாகும்.

8. கீழே தரப்பட்டுள்ள கவிதையில் உள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி

..... தானுந்தன்

பொல்லாச் சிறகை விரித்(து) ஆடினால் போலுமே

கல்லாதான் கற்ற கவி.

9. கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால்
அதில் மானுடர் வேற்றுமை இல்லை
எண்ணங்கள் செய்கைகள் யாவும்
இங்கு யாவர்க்கும் ஒன்றென காணீர்!

இப்பாடலில் உலகில் உள்ள அனைவருக்கும் ஒன்றென கருதக் கூடியது யாது?

: .....

10. பின்வரும் வாக்கியத்தை எழுத்து வழக்கிற்கு மாற்றி எழுதுக.


நான் போயிலை யாவாரம் செய்தேன்.

: .....

11. (i) கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொல்லிற்கு தமிழ்ச் சொல்லை எழுதுக.

Table : .....

(ii) உருவில் தரப்பட்டுள்ள விலங்கின் ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.



: .....

www.ikedu.lk

12. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) We buy stamps from the ..... (market / post office)

(ii) we buy cakes from the ..... (Hospital / Bakery)

13. பின்வரும் வாக்கியத்தை ஆங்கிலத்தில் சொல்லும் விதத்தில் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

நான் உங்களுக்கு உதவலாமா?

: .....

14. "பிச்சமல" என்னும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

: .....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

வாருங்கள் உட்காருங்கள்.

: .....

16. "இருபத்தொன்பதாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது" என்னும் எண்ணுடன் ஒன்றைக் கூட்டும் போது கிடைக்கும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.

: .....

17. இப்பெட்டியினுள் உள்ள எண்களுள் 9 இனால் மீதியின்றி வகுபடக் கூடிய எண் யாது?


399	578
451	675

: .....

18. மாலன் 4 ஈர்க்குத்துண்டுகளைப் பயன்படுத்தி உரோம எண் குறிகளில் எண் 12 இனை வகைக்குறித்துக் காட்டினான். அதற்கேற்ப 20 இலும் குறைந்த ஓர் எண்ணை உரோம எண்குறிகளில் வகைகுறிப்பதற்கு மாலனுக்கு 6 ஈர்க்குத் துண்டுகள் தேவைப்பட்டன. அவ்வெண்ணை உரோம எண்குறிகளில் எழுதுக.

: .....


19.



உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு மொத்தப் பரப்பளவின் என்ன பின்னமாகும்?

: .....

20. கீழே காட்டப்பட்டுள்ள வடிவங்களைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க திண்மங்கள் இரண்டும் யாவை?



(i) : .....

(ii) : .....

www.lkedu.lk

21. (i) இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக.



: .....

(ii) $\frac{3}{5}$, $\frac{1}{2}$, 0.3, $\frac{7}{10}$ இவ்வெண்களில் மிகவும் சிறிய எண் யாது?

: .....

22. பிற்பகல் 2.15 இற்கு சட்டையைத் தைக்க ஆரம்பித்த அம்மா பிற்பகல் 3.20 இற்கு தைத்து முடித்தார்.

(i) சட்டையைத் தைப்பதற்கு எடுத்த நேரம் எவ்வளவு?

: .....

(ii) அம்மா சட்டையைத் தைத்து முடித்த நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக.

: .....

23. ஒரு மின் சுற்றை அமைப்பதற்கு 52m 60cm வயர் தேவை. தற்போது 18m 75cm வயர் கொண்டு வரப்பட்டது.

(i) மின்சுற்றை அமைப்பதற்கு இன்னும் தேவைப்படும் வயர் அளவு யாது?

: .....

(ii) மின் சுற்று சதுர வடிவமாக அமைக்கப்பட்டால் ஒரு பக்க நீளம் யாது?

: .....

24. போத்தல் ஒன்று கொள்ளும் பாலின் கனவளவு 1 லீற்றர் 500 மில்லி லீற்றர் ஆகும். அப்போத்தலில் 800 மில்லி லீற்றர் அளவு பால் இடப்பட்டுள்ளது.

(i) இப்போத்தலை நிரப்புவதற்கு இன்னும் தேவைப்படும் பாலின் அளவு யாது?

: .....

(ii) போத்தலில் தற்போதுள்ள பாலை ஒவ்வொன்றும் 100 மில்லி லீற்றர் கொள்ளளவுடைய எத்தனை சிறிய போத்தல்களில் நிரப்பலாம்?

: .....

25. குறித்த ஒரு கடையில் 1 கிலோகிராம் 250 கிராம் அரிசி வாங்குவதற்கு 200 ரூபாய் தேவை. அப்பணத்தை செலுத்துவதற்கு வாணி 500 ரூபாய் காசுத்தளை வழங்கிய போது மீதிப்பணமாக ஒரே வகையான 5 காசுத்தாள்களும் ஒரே வகையான 5 நாணயங்களும் கிடைத்தன.

(i) இக்கடையில் 1 கிலோகிராம் அரிசியின் விலை யாது?


: .....

(ii) ஐந்து நாணயங்களினதும் மொத்தப் பெறுமதி ரூபாய்களில் எவ்வளவு?

: .....

www.ikedu.lk

26. இந்த எண் சட்டத்தில்




(i) வகை குறிக்கப்படும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.

: .....

(ii) கோல் B இல் உள்ள மணிகளால் வகை குறிக்கப்படும் பெறுமானம் யாது?

: .....

27. அமுதா குறித்தவொரு இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து 150 மீற்றர் கிழக்கு நோக்கிச் சென்றாள். அதன் பின்னர் அவள் அவ்விடத்திலிருந்து உருவில் காட்டப்பட்டுள்ளவாறு வலது பக்கமாகத் திரும்பி இன்னும் 150 மீற்றர் சென்றாள்.



(i) அமுதா ஆரம்ப இடத்திலிருந்து தற்போது எத்திசையில் இருக்கிறாள்?

: .....

(ii) அவள் மீண்டும் ஆரம்ப இடத்தைச் சென்றடைவதற்கு இன்னும் எத்தனை தடவைகள் வலது கைப்பக்கமாகத் திரும்பி முன்னோக்கிச் செல்லவேண்டும்?

: .....

28. 160 முட்டைகளைக் கொண்ட முட்டைக் குவியலில் $\frac{3}{8}$ உடைந்ததன் காரணமாக அகற்றப்பட்டன. மீதியாக இருந்த நல்ல முட்டைகளை கமல், அமல், விமல் மற்றும் தேவி ஆகிய நான்கு சில்லறை வியாபாரிகள் தம்மிடையே சமமாகப் பகிர்ந்து கொண்டனர்.


(i) குவியலில் இருந்த உடையாத முட்டைகளின் எண்ணிக்கை எத்தனை?

: .....

(ii) ஒரு வியாபாரிக்கு கிடைத்த முட்டைகளின் எண்ணிக்கை எத்தனை?

: .....

29. A, B, C, D, E எனப் பெயரிடப்பட்டுள்ள ஐந்து வடிவங்கள் கீழே தரப்பட்டுள்ள உருவில் காட்டப்பட்டுள்ளன. இவ்வடிவங்களில்,



(i) குறைந்த எண்ணிக்கையான சமச்சீர் கோடுகள் வரையப்படத்தக்க வடிவத்துக்குரிய ஆங்கில எழுத்து யாது?

: .....

(ii) அதிக எண்ணிக்கையான சமச்சீர் கோடுகள் வரையப்படத்தக்க வடிவத்துக்குரிய ஆங்கில எழுத்து யாது?

: .....

www.ikedu.lk

● **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. இலையைக் கசக்கும் போது மணம் உண்டாகும் தாவர இலை
(1) மா (2) பலா (3) எலுமிச்சை

31. வெளிப்புறத்தில் வித்தினைக் கொண்ட பழம்
(1) மரமுந்திரி (2) மங்குஸ்தான் (3) நெல்லி

32. ஓக்கிட் பூக்கும் மாதம்
(1) தை (2) வைகாசி (3) பங்குனி

33. பூச்சிகளை உணவாகக் கொள்ளும் தாவரம்
(1) செவ்வரத்தை (2) துரோசிரா (3) துத்திரி

34. பெரும்பாலும் ஆடைகளில் அல்லது விலங்குகளின் உடல்களில் ஒட்டி பரம்பலடையும் வித்து
(1) துத்திரி (2) எண்ணை (3) காசித்தும்பை

35. கலாசார முக்கோண நகரங்களுள் ஒன்று
(1) மாத்தறை (2) கண்டி (3) திருகோணமலை

36. இலங்கையில் உள்ள மூவின மக்களும் வழிபடச் செல்லும் மலை
(1) பேதுருதாலகாலமலை (2) இமயமலை (3) சிவனொலிபாதமலை

37. மலேசியா இலங்கைக்கு
(1) வடக்கே காணப்படும் ஒரு நாடு ஆகும்.
(2) மேற்கே காணப்படும் ஒரு நாடு ஆகும்.
(3) கிழக்கே காணப்படும் ஒரு நாடு ஆகும்.

38. பற்சில்லுகளைக் கொண்ட ஓர் உபகரணம்
(1) கடிகாரம் (2) ஒற்றைச் சில்லு வண்டி (3) மின்விசிறி

39. பின்வரும் எவ்விளையாட்டில் மூங்கில்தடி, மென்பந்து என்பன பயன்படுத்தப்படும்
(1) எல்லே (2) கிரிக்கட் (3) பட்மின்டன்

40. கலங்கரை விளக்கு யாருக்கு பயன்படும்?
(1) விவசாயிகளுக்கு (2) மீனவர்களுக்கு (3) சைக்கிள் ஓட்டிகளுக்கு

41. வீட்டில் அனைவரும் பொதுவாக பயன்படுத்தக்கூடிய பொருள்?
(1) சீப்பு (2) குடை (3) துடைதுண்டு

42. 
அருகிலுள்ள வீதிச்சமிக்ஞை குறியீடு குறிப்பது,
(1) வாகனம் நிறுத்தலாம்.
(2) வாகனம் வேகமாகச் செல்லத் தடை.
(3) வாகனம் நிறுத்தத்தடை.

43. இலங்கையில் தேயிலை முதன் முதலாக பயிரிடப்பட்ட இடம்
(1) லூல்கந்துர (2) நுவரெலியா (3) பேராதெனிய

44. உடலைப் பாதுகாப்பதில் கூடிய பங்களிப்புச் செய்யும் உணவுப் பொருள்களின் கூட்டம்
(1) பசளி, பப்பாசி, பருப்பு
(2) வல்லாரை, அன்னாசி, பசளி
(3) சோறு, பாண், இடியப்பம்

45. மீன், பால்டின் போன்ற உணவுகளைப் பாதுகாப்பதற்கு தற்காலத்தில் பயன்படுத்தப்படும் முறை
(1) புகையூட்டல் (2) தகரத்தில் அடைத்தல் (3) அவித்தல்

46. பண்டைய அரசர்களினால் மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசனக் கைத்தொழில் மூலம் எமது நாட்டில் பிரதானமாகச் செய்யப்படும் ஓர் உற்பத்தி,
(1) தேயிலை (2) மரக்கறி (3) அரிசி

47. நோய்க்காவியான நுளம்பு தீண்டுவதனால் ஏற்படக்கூடிய நோய்களுள் ஒன்று
(1) கழிச்சல் நோய் (2) டெங்கு (3) கொப்பளிப்பான்

www.ikedu.lk

48. மண்ணரிப்பை தடுக்கக்கூடிய வழிகளுள் ஒன்று
(1) மரங்களை வெட்டுதல் (2) கல்வேலிகளை அமைத்தல் (3) பள்ளத்தாக்குகளில் மண் அகழ்தல்

49. உக்கக்கூடிய கடதாசி மற்றும் காட்போட் அட்டைகளை இடுவதற்கு பொருத்தமான தொட்டியின் நிறம்?
(1) நீலம் (2) பச்சை (3) செம்மஞ்சள்

50. பிரபல எழுத்தாளராகவும் வானியல் விஞ்ஞானியாகவும் உலகிற்குச் சிறந்த சேவையாற்றியவர்
(1) சேர் ஆதர் சி. கிளாக் (2) கலாநிதி ரீ.பி. ஜாயா (3) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

51. இலங்கைக்கு முதன் முறையாக ஒலிம்பிக் பதக்கம் ஒன்றைப் பெற்றுக் கொடுத்த டங்கன் வைட் கலந்து கொண்ட போட்டி
(1) 200m ஓட்டம் (2) 400m தடை தாண்டல் (3) 200m தடை தாண்டல்

52. சமூக விரோதச் செயற்பாடு அல்லாதது பின்வருவனவற்றுள் எது?
(1) போதைப் பெபருள் வியாபாரம்
(2) புகையிரத நிலையத்தில் புகைப்பிடித்தல்
(3) பஸ் வண்டியினுள் உணவுப் பொருள்களை விற்பனை செய்தல்

53. இலங்கை தேசப்படத்தில் அதிவேக பாதையும், பிரதான வீதியையும் குறிக்க பயன்படும் நிறங்கள் முறையே,
(1) ஊதா, மஞ்சள் (2) ஊதா, சிவப்பு (3) சிவப்பு, ஊதா

54. அவசர மருத்துவ சேவை தகவல்கள் மற்றும் அம்புலன்ஸ் வண்டி சேவை போன்றவற்றை பெற அழைக்க வேண்டிய இலக்கம்?
(1) 1977 (2) 1990 (3) 1997

55. பயிர் செய்வதற்கு தெரிவு செய்ய வேண்டியது,
(1) சூரிய ஒளி நன்கு கிடைக்கின்ற, நீர் வழிந்தோடும், கற்கள் அற்ற சம தரையாகும்.
(2) கற்களைக் கொண்ட நீர் வடிந்தோடும் சம தரையாகும்.
(3) சூரிய ஒளி குறைவாக கிடைக்கின்ற, பாரிய மக்கள் உள்ள, கற்களைக் கொண்ட தரையாகும்.

56. நபர் ஒருவருக்கு காலை வேளையில் சூரிய ஒளியுடன் சிறுமழை பெய்யும் போது வானவில் தென்படக்கூடிய திசை?
(1) வடக்கு (2) கிழக்கு (3) மேற்கு

57. குளத்தருகே அமைந்துள்ள கிராமம் ஒன்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு குளக்கட்டு திறக்கத் தீர்மானிக்கப்பட்டது. இச்செய்தியைக்கிராம மக்களுக்கு விரைவாக அறியப்படுத்த பயன்படுத்தக்கூடிய ஊடகம் எது?
(1) தொலைபேசி (2) கணிணி (3) ஒலி பெருக்கி

58. தீப்பற்றியதன் காரணமாக உடலின் ஒரு பகுதி எரிந்த நபரொவருக்கு முதலுதவியைப் பெற்றுக் கொடுக்கையில் எம்மால் முதலில் செய்யவேண்டியது எது?
(1) சுத்தமான குளிர்நீரால் எரிந்த பகுதியைக் குளிர்மையாக்குதல்.
(2) எரிந்த பகுதியில் ஒட்டிக் கொண்டிருக்கும் ஆடைகளை அகற்றுதல்.
(3) எரிந்த பகுதியின் மீது எண்ணெய் வகை ஒன்றைப் பூசுதல்.

59. சகல சௌபாக்கியங்களையும் கொண்ட தன்னிறைவான இந்நாட்டில் சூரியனும் சந்திரனும் நிலைத்திருக்கும் காலமெல்லாம் தார்மீகத்தைக் காத்தவாறு நாட்டு மக்கள் யாவரும் இருப்பார்களாக! இக்கருத்தை வெளிப்படுத்துவது இலங்கையின்
(1) தேசியக் கொடி ஆகும். (2) அரச இலச்சினை ஆகும். (3) தேசிய கீதம் ஆகும்.

60. 'தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெற எம்மால் கடைப்பிடிக்கக்கூடிய சுகாதார வழிமுறைகள்' என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இடம் பெறவேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

- .....
  .....
- .....
  .....
- .....
  .....

- * -**

www.ikedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2021

ஆசிரியர் : ஏ.எம். சனூஸ்

அறிவுத்தாரகை 5
ARIVUTHTHARAHAI

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL, 2021

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2021

மாதிரி வினாத்தாள் **7**

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

வினாத்தாள் - I இற்கான புள்ளித்திட்டம்

1.	3	**11.**	28	**21.**	53	**31.**	78
2.	5	**12.**	30	**22.**	55	**32.**	80
3.	8	**13.**	33	**23.**	58	**33.**	83
4.	10	**14.**	35	**24.**	60	**34.**	85
5.	13	**15.**	38	**25.**	63	**35.**	88
6.	15	**16.**	40	**26.**	65	**36.**	90
7.	18	**17.**	43	**27.**	68	**37.**	93
8.	20	**18.**	45	**28.**	70	**38.**	95
9.	23	**19.**	48	**29.**	73	**39.**	98
10.	25	**20.**	50	**30.**	75	**40.**	100

85 - 100 மிக நன்று ☐

75 - 85 நன்று ☐

75 கீழ் - அதிகம் முயற்சிக்கவும் ☐

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

www.kedu.lk

[பக். 2 ஐப் பார்க்க



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English


76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

● **1, 2** ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.


1.





(1) (2) (3)

2.






(1) (2) (3)

● **3, 4** ஆகிய வினாக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களிலிருந்தும் வேறுபடுகின்றது. வேறுபடும் உருவைத் தெரிவு செய்க.

3.



(1) (2) (3)

4.



(1) (2) (3)

● **5, 6** ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம். அவற்றில் மூன்று இருக்கும் கூட்டம் யாது?

5. கத்தரி, பாகல், புடோல், வெண்டி, தக்காளி

(1) கத்தரி, புடோல், தக்காளி

(2) பாகல், புடோல், தக்காளி

(3) கத்தரி, வெண்டி, தக்காளி

6. நாதஸ்வரம், மேளம், புல்லாங்குழல், தபேலா, மகுடி

(1) மேளம், தபேலா, மகுடி

(2) நாதஸ்வரம், புல்லாங்குழல், மகுடி

(3) நாதஸ்வரம், மேளம், புல்லாங்குழல்

www.ikeau.lk

சுட்டெண் : .....

● **7, 8** ஆகிய வினாக்களுக்கு பின்வரும் கட்டவலையைக் கொண்டு விடை தருக.

A 1	F 3	E 5	
	B 6	H 6	C 6
D 2	G 9		I 3


7. இலக்கம் 9 ஆல் வகுபடக் கூடிய நிரையைக் காட்டும் எழுத்துக் கூட்டம் யாது?

(1) BHC (2) FBG (3) CI

8. கட்டவலையில் இரண்டாவது நிரலில் உள்ள FB ஆகிய எண்களை நிரலாக இடமாற்றம் செய்யும் போது கிடைக்கக் கூடிய எண்ணை சரியாகக் காட்டும் நிரல் யாது?

(1) EH (2) HB (3) CI

9. பின்வரும் உருக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள செங்கோணத்தை விட குறைந்த கோணங்கள் அதிகரிக்கும் ஒழுங்கில் அவ்வுருக்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.



A B C

(1) ACB (2) ABC (3) BCA

10. பின்வரும் அட்டவணையில் உள்ள பொருள்களில் விலைகூடிய பொருளையும் விலை குறைந்த பொருளையும் முறையே தெரிவு செய்க.

பொருள்	விலை	
	ரூபாய்	சதம்
அரிசி 1 kg	120	00
பருப்பு 200g	40	00
வெங்காயம் 500g	65	00


(1) அரிசி, பருப்பு

(2) பருப்பு, அரிசி

(3) பருப்பு, வெங்காயம்

www.ikedu.lk

11. பின்வரும் உருக்களில் உள்ள எண்கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.



(1) 9 (2) 18 (3) 27

12. பின்வரும் கலந்துரையாடலை வாசிக்க.

A - அப்பா வீட்டில் இருக்கின்றாரா?

B - ஹலோ! யார் பேசுவது?

C - ஆம். பத்திரிகை வாசித்துக் கொண்டிருக்கின்றார்.

D - நான் தான் மாமா பேசுகிறேன்.


E - இதோ, அப்பாவை அழைக்கின்றேன்.

இக்கலந்துரையாடல் மிகப்பொருத்தமான ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) ADBEC (2) BDACE (3) BDAEC

13. பின்வரும் உருவில் உள்ள எண் கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்துக்கு பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

2	4	6	8
4			6
6		2	4
8	6	4	2



(1) (2) (3)

14. 5, 9, 13, 17 ..... என்ற எண் தொடர் ஒழுங்கில் 13 ஆவது எண் யாது?

(1) 50 (2) 53 (3) 57

15. 0.25 அடைப்பில் உள்ள தசம எண்ணை எழுத்துக்களில் எழுதினால்,

(1) பூச்சியம் தசம் இருபத்தைந்து ஆகும்.

(2) பூச்சியம் தசம் இரண்டுக்கு ஐந்து ஆகும்.

(3) பூச்சியம் தசம் இரண்டு ஐந்து ஆகும்.

16. திருமண நிகழ்வில் கலந்து கொண்ட 6 நண்பர்கள் புதுமணத் தம்பதிக்கு கைகொடுத்தனர். எனில், இங்கு இடம்பெற்ற கைகுலுக்கல்கள் எத்தனை?

(1) 28 (2) 15 (3) 12

www.lkedu.lk

17. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.


வட்டம் : தளவடிவம் எனின் உருளை : .....

(1) வட்டம் (2) திண்மம் (3) மீன்டின்

18. பத்து மாணவர்கள் மைதானத்தில் வட்டமாக நின்று தங்களுக்குள் 1, 2, 3, ..., 10 என தங்களை அடையாளப்படுத்தினர். இவர்களுள் ஒன்றுவிட்டு ஒருவர் கூறிய எண்களின் கூட்டுத்தொகையாக அமைய முடியாதது?

(1) 55 (2) 30 (3) 25

19.



அருகிலுள்ள சிறிய சதுரங்களைக் கொண்டு எத்தனை செவ்வக துண்டுகளை அமைக்க முடியும்?

(1) 10

(2) 18

(3) 22

20. →

1	2	5	3	4
6	7	10	9	8
12	11	13	14	15

அருகிலுள்ள எண்களை குறித்த கோலத்திற்கு ஏற்ப ஒழுங்குபடுத்தும்போது மாற்றம் செய்யப்படும் எண்களின் எண்ணிக்கை யாது?

(1) 5 (2) 6 (3) 7

● இரண்டு மாம்பழங்கள் வாங்கும் பணத்திற்கு ஒரு தோடம்பழத்தை வாங்கலாம் மூன்று தோடம்பழங்கள் வாங்கும் பணத்திற்கு ஒரு அன்னாசிப்பழத்தை வாங்கலாம். ஒரு மாதுளம்பழத்தின் விலை, ஒரு மாம்பழத்தினதும் இரண்டு தோடம்பழங்களினதும் விலைக்குச் சமமாகும். இதனைக் கொண்டு **21, 22** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

21. விலை கூடிய பழம் யாது?


(1) மாதுளை (2) அன்னாசி (3) தோடம்பழம்

22. ஒரு மாதுளம்பழம் வாங்கும் பணத்திற்கு எத்தனை மாம்பழங்கள் வாங்க முடியும்?

(1) 5 (2) 6 (3) 8

23. காலை 6.20 இற்குக் கண்டியிலிருந்து மட்டக்களப்பை நோக்கி ஒரு மாறாத கதியில் நிறுத்தாமல் செலுத்தப்படும் ஒரு பேருந்தின் பயணம் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.


அடைந்த நகரம்	நகரத்தில் உள்ள Km தூண்	அடைந்த நேரம்
பதியத்தலாவை	120 Km	காலை 9.00
மட்டக்களப்பு	180 Km	.....



இதற்கேகற்ப பேருந்து மட்டக்களப்பு நகரத்தை முற்பகல் எத்தனை மணிக்கு அடையும்?

(1) மு.ப 10.45 (2) மு.ப 10.30 (3) மு.ப 10.20

www.ikedu.lk

24. 


அருகிலுள்ள தாயக்கட்டையின் எதிர்ப்பக்கங்களை சரியாகக் காணும் விடை?

(1) K -W, P - S, R - Q

(2) S - Q, K - W, P - R

(3) P - R, K - Q, S - W

25. ஓர் ஆடைத் தொழிற்சாலையில் களஞ்சியப்படுத்தப்பட்ட ஆடைகள் ABCD என்னும் நான்கு அறைகளில் வைக்கப்பட்டுள்ள விதம் இவ்வுருவில் வகைக்குறிக்கப்பட்டுள்ளது.



அறை A இல் உள்ள ஆடைகளின் எண்ணிக்கை 180 ஆகும். இதற்கு ஏற்ப B, C ஆகிய இரண்டு அறைகளிலும் உள்ள ஆடைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 270 (2) 240 (3) 210

26. நான்கு இலக்கங்களைக் கொண்ட ஓர் எண் உள்ளது. அந்த எண்ணின்

* முதலாம் இலக்கம் நான்காம் இலக்கத்தின் அரைவாசியாகும்.
* இரண்டாம் இலக்கம் முதலாம் இலக்கத்தின் அரைவாசியாகும்.
* மூன்றாம் இலக்கம் முதலாம், இரண்டாம் இலக்கங்களின் கூட்டுத்தொகைக்குச் சமம்.

அவ்வெண் கீழே தரப்பட்டுள்ள எண்களில் யாதாக இருக்கலாம்?

(1) 3696 (2) 4268 (3) 2144

● ஒரு போட்டியின் மூன்று சுற்றுகளில் ஐந்து விளையாட்டு வீரர்கள் விளையாடிய விதங்கள் கீழே உள்ளன. இதனைக் கொண்டு **27, 28** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

சுற்று	அருண்	ராஜு	வினோத்	தமீம்	பரீட்
முதல் சுற்று	-	+	+	**0**	+
இரண்டாம் சுற்று	**0**	**0**	**0**	-	+
மூன்றாம் சுற்று	+	-	+	**0**	-

நல்லது - +
சராசரி - -
குறைவு - **0**

27. முழுப் போட்டியிலும் நன்றாக விளையாடியவர் யார்?

(1) வினோத் (2) பரீட் (3) அருண்

28. போட்டியில் ராஜுவிலும் பார்க்க நன்றாக விளையாடிய விளையாட்டு வீரர் யார்?

(1) அருண் (2) வினோத் (3) தமீம்

29. ஒரு குறித்த பாடசாலையில் நூலகத்திற்கு வடக்கே விஞ்ஞான ஆய்வுகூடம் உள்ளது. நூலகத்திற்குத் தெற்கே விளையாட்டு மைதானம் உள்ளது. எனின்,

(1) விளையாட்டு மைதானத்திற்குத் தெற்கே நூலகம் உள்ளது.

(2) விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கும் நூலகத்திற்கும் இடையே விளையாட்டு மைதானம் உள்ளது.

(3) விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கு தெற்கே விளையாட்டு மைதானம் உள்ளது.

30. வீட்டிலுள்ளவர்களின் வயதுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.


(1) தம்பி, அக்கா, அப்பா, பாட்டி

(2) மகன், மகள், அண்ணா, அப்பா


(3) தங்கை, அக்கா, அம்மா, அப்பா

www.ikedu.lk

31. இவ்வுருவில் காணப்படும் உரு C, D ஆகிய தட்டுகளில் வைக்கப்பட்டுள்ள பழங்களின் நிறைகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாகும். இதற்கேற்ப,



உரு C



உரு D

நிறை கூடிய பழம் யாது?



(1)



(2)



(3)

32. 1 தொடக்கம் 30 வரையுள்ள எண்களில் 7ஆல் வகுபடும் எண்களையும் 7ஐ ஏதாவது ஒரு இடத்தில் கொண்ட எண்களையும் நீக்கினால் கிடைக்கும் எண்களின் எண்ணிக்கை எத்தனை?

(1) 25 (2) 24 (3) 23

33. இரு வெற்றுக் கட்டங்களுக்கும் பொருத்தமான இரு கணிதச் செய்கைகளையும் முறையே தெரிவு செய்க.

$121 \square 11 = 7 \square 4$

(1) ÷ , + (2) ÷ , x (3) -, x

34. பின்வரும் உருத்திரையில் உள்ள கோலத்திற்கு ஏற்ப இரு வெற்றிடங்களிலும் இருக்க வேண்டிய உருச்சோடியைத் தெரிவு செய்க.





(1) 

(2) 

(3) 

35. பின்வரும் இரு தளவடிவங்கள் தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுகளில் சரியானதைத் தெரிவு செய்க.






(1) உச்சிகளின் எண்ணிக்கை சமமாகும்.


(2) விளிம்புகளின் எண்ணிக்கை முகங்களின் எண்ணிக்கையிலும் குறைவாகும்.

(3) இரு தளவடிவங்களிலும் பக்கங்கள் ஒன்றுக்கொன்று சமமாகும்.


www.ikedu.lk

36. 


பின்வரும் உருவிலுள்ள கடிகாரத்தின் முகத்தை முகம் பார்க்கும் கண்ணாடியை நோக்கித்திருப்பி அக்கண்ணாடியினூடாகப் பார்க்கும் போது அக்கடிகார முகம் காணப்படும் விதத்தைத் தெரிவு செய்க.



(1)



(2)



(3)


37. ஒரு வீதியில் இரு மின் கம்பங்களுக்கிடையே 2 கொடிகள் வீதம் தொங்கவிடப்பட்டு அவ்வீதியை அலங்கரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. வீதியின் ஒரு பக்கத்தில் 8 மின்கம்பங்கள் இருந்தால், இரு பக்கங்களுக்கும் இடையே தொங்க விடுவதற்கு எத்தனை கொடிகள் தேவை?

(1) 14 கொடிகள் (2) 16 கொடிகள் (3) 28 கொடிகள்

38. பாலன் மோகன், ராதா ஆகிய மூவருக்கும் பாடசாலையில் பயிற்சிக் கொப்பிகள் பங்கிடப்பட்டன. பங்கிடப்பட்ட மொத்தக் கொப்பிகள் 26 எனின் பாலன், ராதா பெற்றுக்கொண்ட பயிற்சிக் கொப்பிகளின் எண்ணிக்கை முறையே,

(1) பாலன் - 10, ராதா - 8
(2) பாலன் - 9, ராதா - 8
(3) பாலன் - 8, ராதா - 9

39. கீழே தரப்பட்டுள்ள இரு உருக்களுக்கும் ஏற்ப A அளவுள்ள ஓர் அட்டைத்தாளிலிருந்து B அளவுள்ள எத்தனை முக்கோணிகளை உயர்ந்த பட்சம் வெட்டலாம்?



(1) 15 (2) 21 (3) 27

40. ஒரு விருந்துபசார நிகழ்வில் கலந்து கொண்ட 25 பேர்களிடையே 18 பேருக்கு தேநீரும் 15 ருக்கு வடையும் வழங்கப்பட்டது. அவர்கள் அனைவருக்கும் பருகுவதற்கு தேநீரோ, உண்பதற்கு வடையோ வழங்கப்பட்டது. சிலருக்கு பருகுவதற்கு தேநீரும் உண்பதற்கு வடையும் வழங்கப்பட்டது. அவ்வாறு தேநீரும் வடையும் கிடைக்கப்பெற்ற நபர்கள் எத்தனை?

(1) 8 (2) 25 (3) 33

- * -**

www.ikedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2021

ஆசிரியர் : ஏ.எம். சனூஸ்

அறிவுத்தாரகை 5

ARIVUTHTHARAHAI

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL, 2021

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2021

மாதிரி வினாத்தாள் 7

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களில் உப பகுதிகள் உள்ளன.)
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **கோட்டினை மாத்திரம் இடுக.**
* மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

வினாத்தாள் - IIஇற்கான புள்ளித்திட்டம்

1.	6	11.	2	21.	2
2.	2	12.	2	22.	2
3.	4	13.	1	23.	2, 1
4.	2	14.	1	24.	2
5.	2	15.	1	25.	2
6.	1	16.	2	26.	2
7.	1	17.	2	27.	2
8.	1	18.	2	28.	4
9.	1	19.	2	29.	4
10.	1	20.	2, 1	30-59	30

85 - 100 மிக நன்று

75 - 85 நன்று

75 கீழ் - அதிகம் முயற்சிக்கவும்

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T/CH

www.ikedu.lk

[பக். 2 ஐப் பார்க்க

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

1. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

விண்வெளிக்கு பயணம் செய்த முதல் மனிதர் யூரிகாரின் ஆவார். இவர் ரஷ்யா நாட்டைச் சேர்ந்தவர். ரஷ்யாவில் மொஸ்கோ நகருக்கு மேற்கே அமைந்துள்ள க்ஸாட்ஸ்க் பகுதியில் உள்ள குளுஷினோ என்னும் இடத்தில் 1934ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆந் திகதி பிறந்தார். அவர் பயணித்த வொஸ்ரொக் - 1 விண்கலம் விண்ணில் ஒரு மணித்தியாலம் நாற்பத்தெட்டு நிமிடங்கள் பறந்தது. விண்வெளியில் பறந்த உணர்வை வயிற்றுக்குள் பட்டாம் பூச்சிகள் சிறகடித்தது போல் இருந்தது எனக் கூறினார். இவரது நினைவாக உலகெங்கும் ஏப்ரல் 12 ஆந் திகதி சர்வதேச விண்வெளி வீரர்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

● **பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.**

(i) விண்வெளிக்கு பயணம் செய்த முதல் மனிதர் யார்?

: .....

(ii) யூரிகாரின் பிறந்த இடம் யாது?

: .....

(iii) பந்தியில் இடம்பெறும் உவமைத் தொடரை எழுதுக?

: .....

(iv) பந்தியில் குறிப்பிடப்படும் விண்கலத்தின் பெயர் யாது?

: .....

(v) ஏப்ரல் 12 ஆந் திகதி கொண்டாடப்படும் தினம் யாது?

: .....

(vi) பந்தியில் இடம்பெறும் நிகழ்கால வினைச் சொல்லை எழுதுக?

: .....

2. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) மோகன் தாகந்தீரக் குளிர் ..... குடித்தான். (பானம் / பாணம்)

(ii) அவர்கள் ஒருவரை ஒருவர் தள்ளிக் கொண்டு மாடியிலிருந்து .....
(இரங்கினர் / இறங்கினர்)

3. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்புகள் சரியாக எழுதப்பட்டிருப்பின் (✔) எனவும் பிழையாக எழுதப்பட்டிருப்பின் (✖) எனவும் வாக்கியத்திற்கு எதிரே உள்ள அடைப்புக்குள் இடுக.

(i) சேவல் அதிகாலையில் கூவின. (.....)

(ii) பறவைகள் தோட்டத்திற்கு வந்தன. (.....)

(iii) நாங்கள் காலையில் கண்டிக்குச் சென்றேன். (.....)

(iv) நான் அழகிய காட்சிகளை பார்த்து இரசிப்பேன். (.....)

4. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்றொடருக்குப் பொருத்தமான கருத்தை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) அவன் தனது நண்பனுடைய செயலைக் கண்டு **தலை கவிழ்ந்தான்.**
(வெட்கமடைந்தான் / துன்பத்திலிருந்து நீங்கினான்)

(ii) ஆசிரியர் மாலனை **தட்டிக் கொடுத்தார்.**
(சாக்குப் போக்குச் சொன்னார் / உற்சாகப்படுத்தினார்)

www.ikedu.lk

சுட்டெண் : .....

5. தொடர்மொழிக்குப் பொருத்தமான தனிச் சொல்லை தெரிவு செய்து எழுதுக.

(i) தாய் தந்தையை இழந்தவன் ..... (அநாதை / அடிமை)

(ii) கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன் சரி பிழை பார்த்துத் திருத்தும் நிகழ்வு .....
(வெள்ளோட்டம் / ஒத்திகை)

6. கீழே தரப்படட்டுள்ள கவிதையில் உள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.

கும்மியடி பெண்ணே கும்மியடி - நீ
குனிந்து வளைந்து கும்மியடி
..... - நீ
குலத்தைக் காத்திட கும்மியடி

7. கீழே தரப்பட்டுள்ள பெண்பால் சொல்லுக்குப் பொருத்தமான ஆண்பால் சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

பாட்டி : .....

8. பின்வரும் வாக்கியத்தை வினா வாக்கியமாக எழுதுக.

நாளை இடியுடன் கூடிய மழை பெய்யும்.

: .....

9. பின்வரும் விடுகதைக்குரிய விடையை எழுதுக.

சின்னப்பெட்டிக்குள் கீதங்கள் ஆயிரம் ஆயிரம். அது என்ன?

: .....

10. பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்க.

உப்பில்லாப் பண்டம் .....

11. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

(i) நேற்று : .....

(ii) காய்ச்சல் : .....

12. கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

(i) you? / are / How

: .....

(ii) will / come / I / tomorrow

: .....

13. பின்வரும் வாக்கியத்தை ஆங்கிலத்தில் சொல்லும் விதத்தில் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

என்னை மன்னிக்கவும். : .....

www.lkedu.lk

14. 'கெதற' என்னும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

: .....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

உங்கள் பாடசாலை எது?

: .....

16. 'பத்தாயிரத்து தொண்ணூறு' என்னும் எண்ணுடன் பத்தைக் கூட்டும் போது கிடைக்கும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

: .....

17.

7	4
3	2

கட்டத்தினுள் உள்ள இலக்கங்களைக் கொண்டு உருவாக்கக்கூடிய மிகச் சிறிய மூன்று எண்களை உருவாக்கி ஏறுவரிசைப்படுத்துக.

: .....

18. சதுரமுகி ஒன்றில் உள்ள

(i) உச்சிகளின் எண்ணிக்கை யாது?

: .....

(ii) ஓரங்களின் எண்ணிக்கை யாது?

: .....

19. பின்வரும் உரோம எண்களை தீர்த்து வரும் விடையை உரோம எண்ணில் எழுதுக?

xx - ix = ...


20. (i) $\frac{6}{10}$ என்பதை தசம எண்ணாக எழுதுக?

: .....

(ii) 0.75 என்பதை ஒரு பின்னமாக எழுதுக?

: .....

21.



இந்த உருவுக்கு எத்தனை சமச்சீர் கோடுகளை வரையலாம்?

: .....

22. 140 பேனைகளை 8 பேர்களிடையே சமமாகப் பங்கிடும் போது எஞ்சும் பேனைகளின் எண்ணிக்கை யாது?

: .....

23. மு.ப. 11.30 இற்கு சமைக்க ஆரம்பித்த அம்மாவுக்கு அவ்வேலையை முடிப்பதற்கு 1 மணித்தியாலம் 30 நிமிடம் எடுத்தது.

(i) அம்மா சமைத்து முடித்த நேரத்தை 24 மணித்தியாலக் கடிகாரத்தில் இலக்கங்களில் எழுதுக.

: .....

(ii) அம்மா சமைப்பதற்கு எடுத்த நேரத்தை நிமிடங்களில் எழுதுக.


: .....

www.lkedu.lk

24. ஒரு பாத்திரத்தில் 1l 75 ml பாலும் இன்னுமொரு பாத்திரத்தில் 1l 75ml பாலும் காணப்பட்டது. இரண்டு பாத்திரங்களிலும் உள்ள பாலின் மொத்த அளவு யாது?

: .....

25. ஒரு நகரத்தின் பகுதி ஒன்று கீழே வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




(i) சந்தை பிரதான வீதியிலிருந்து எத்திசையில் அமைந்துள்ளது?

: .....

(ii) வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள பாதை வழியே நபர் ஒருவர் பிரதான வீதியின் A என்னும் இடத்திலிருந்து B என்னும் இடம்வரை பயணம் செய்தாராயின், அவர் பயணம் செய்த மொத்தத் தூரம் கிலோமீற்றர், மீற்றர் ஆகியவற்றில் எவ்வளவு?

: .....

26.




உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவு யாது?

: .....


27. பின்வரும் ஒவ்வொரு உருவிலும் உள்ள செங்கோணங்களின் எண்ணிக்கையை எழுதுக.

(i)



: .....

(ii)



: .....

28. ஒரு புத்தகத்தின் விலை ரூ. 60 எனவும் ஒரு பேனையின் விலை ரூ. 15 எனவும் கடை ஒன்றின் விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(i) கடைக்குச் சென்ற ராமனுக்கு இரண்டு புத்தகத்தையும் ஒரு பேனையும் வாங்குவதற்குத் தேவையான பணம் எவ்வளவு?


: .....

(ii) ராமன் மேலே உள்ள பொருள்களை வாங்கிக் கொண்டு கடை உரிமையாளருக்கு ரூ. 50 காசுத்தாள்கள் 3ஐக் கொடுத்தாராயின் அவருக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

: .....

www.lkedu.lk

29. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய ஒரு பாடசாலையின் மாணவர்களில் 150 புள்ளிகளை விடக்கூடிய புள்ளிகளைப் பெற்று தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையை வகைகுறிப்பதற்கு இந்த வரைபு வரையப்பட்டுள்ளது.



(i) தரம் 5C இல்தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை தரம் 5B இல் தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையின் இருமடங்காகும். தரம் 5C இல் தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையை வரைபில் குறிக்க.

(ii) அப்பாடசாலையில் தகைமை பெற்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

● **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. 

அருகிலுள்ள தாவர இலை

(1) புளி
(2) வேம்பு
(3) முருங்கை

31. இரும்புத்தொழில் வேலைகளின் போது பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்கள் மாத்திரம் அடங்கும் விடையைத் தெரிவு செய்க.
(1) சாவணம், பட்டடைக்கல், அரிவாள்
(2) துருத்தி, தணல் இடுக்கி, பட்டடைக்கல்
(3) துருத்தி, தணல் இடுக்கி, சீவுளி

32. இலங்கையில் கடற்கரை இருக்கும் மாவட்டத்தையும் கடற்கரை இல்லாத மாவட்டத்தையும் குறிக்கும் ஒரு மாகாணம்
(1) மத்திய மாகாணம் (2) வடமேல் மாகாணம் (3) தென் மாகாணம்

33. தூரத்தில் இருக்கும் ஒரு பொருளை பார்க்கும் போது அப்பொருள் தலைகீழாக காட்சியளித்தது. இதற்கு காரணம்
(1) நபர் தலைகீழாக நின்று பார்த்தமையால்
(2) நபர் ஊசித்துளை கமராவின் ஊடாக பார்த்தமையால்
(3) நபர் தொலைக்காட்டி மூலம் பார்த்தமையால்

34. நீருக்கு இருக்கக்கூடிய ஓர் இயல்பாக அமையாதது.
(1) நிலையான வடிவம் இருத்தல்
(2) குளிர்த்தும் போது பனிக்கட்டியாக மாறுதல்
(3) கொண்டில் தூளினால் நிறமூட்டப்படல்

35. பச்சையாக வெட்டிய எம்மரக்கறித்துண்டுகளை நிறம் மாறாமல் இருக்க உப்பு அல்லது மஞ்சள் கலந்த நீரில் இடுதல் வேண்டும்?
(1) பூசணிக்காயும், மரவள்ளியும்
(2) பீற்றூட்டும், வாழைக்காயும்
(3) மரவள்ளியும், வாழைக்காயும்

36. துரியம்பூவை நாடிச் செல்லும் முளையூட்டி,
(1) வெளவால் (2) கருங்குரங்கு (3) சருகுமான்

37. பின்வருவனவற்றுள் இயற்கை அனர்த்தங்களுள் ஒன்றல்லாதது.
(1) இடிமின்னல் (2) சூறாவளி (3) தீப்பற்றல்

www.lkedu.lk

38. தேசப்படத்தில் வைத்தியசாலையைக் குறிக்க பயன்படும் குறியீடு,


(1)


(2)


(3)

39. 

அருகிலுள்ள நாணயத்தாளில் காணக்கூடிய ஓர் அம்சம்
(1) மூன்று பிரெயில் புள்ளிகள் காணப்படுகின்றமை.
(2) நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் பொறிக்கப்பட்டுள்ளது.
(3) மன்னம்பிட்டிய பாலத்தின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

40. பண்டைய தொடர்பாடல் முறைகளுள் ஒன்றல்லாதது.
(1) கூக்குரலிடல் (2) தீக்குவியல் மூட்டல் (3) தொலைபேசியில் அழைத்தல்

41. 'கட்டுமரத்தோணியில் ஏலேலோ ஐலசா...' என்னும் பாடல்
(1) அரிவி வெட்டல்
(2) படகோட்டல்
(3) சேனை காத்தல்

42. இலங்கைக்கு தூரத்தில் அமைந்துள்ள நாடுகள்
(1) பங்களாதேஷ், இந்தியா, ஜப்பான்
(2) இந்தியா, நேபாளம், பூட்டான்
(3) சீனா, இங்கிலாந்து, ஜப்பான்

43. செயற்கை நிறப்பொருள்கள், சுவையூட்டிகள் ஆகியன சேர்க்கப்பட்ட உணவுகளை உட்கொள்வதால் ஏற்படக் கூடிய நோய்,
(1) புற்றுநோய் (2) நீரிழிவு (3) நெருப்புக்காய்ச்சல்

44. கொவிட் - 19 நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்குப் பின்பற்றக்கூடிய நடைமுறையொன்று
(1) கொதித்தாரிய நீரைப்பருகுதல்.
(2) சூழவுள்ள சுற்றாடலை சுத்தப்படுத்தல்.
(3) முகக்கவசம் மற்றும் சமூக இடைவெளிகளைப் பேணுதல்.

45. ஒரே தடவையில் அதிகளவான பயணிகள் பயணஞ்செய்யக்கூடிய தரைவழிப் போக்குவரத்து சாதனம்,
(1) கப்பல் (2) புகையிரதம் (3) ஆகாய விமானம்

46. நாற்று மேடைகளிலிருந்து நாற்றுகள் பெறப்பட்டுப் பாத்திகளில் நடப்படுகின்ற பயிர் வகைகளை மாத்திரம் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
(1) போஞ்சி, வெண்டி, பசளி
(2) கறிமிளகாய், கத்தரி, தக்காளி
(3) போஞ்சி, தக்காளி, கறிமிளகாய்

47. வீதிச் சமிக்ஞை கம்பத்தில் பச்சை நிற விளக்கு ஒளிராவிட்டால் நாம் கருதக்கூடியது?
(1) வாகனத்தை செலுத்துதல் வேண்டும்.
(2) வாகனத்தை திருப்புதல் வேண்டும்.
(3) வாகனத்தை செலுத்துவதற்கு தயாராக வேண்டும்.

48. சூழலுக்கு ஏற்ப தனது நிறத்தை மாற்றக்கூடிய கடல்வாழ் உயிரினம்.
(1) பச்சோந்தி (2) கணவாய் (3) ஒக்டோபஸ்

49. தட்டுவதன் மூலம் அதிர்வுடன் ஒலி எழுப்பும் சங்கீத உபகரணம்
(1) கொம்பு (2) தவில் (3) ஆர்மோணியம்

50. மருந்து வகைகளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய இடம்
(1) சிறப்பு சந்தை (2) கொழும்பு போர்ட் சிட்டி (3) அரச ஓசுசல

www.ikedu.lk

51. காற்றினால் பரம்பலடையும் வித்துக்கள் கொண்டுள்ள சிறப்பியல்பொன்று
(1) பாரம் குறைந்ததாக இருத்தல்
(2) சிறகுகள் காணப்படுதல்
(3) ஒட்டிக்கொள்ளும் தன்மை காணப்படுதல்


52. உலகில் அதிகளவான ரசிகர்கள் விரும்பி பார்க்கும் ஒரு விளையாட்டு
(1) கிரிக்கெட் (2) உதைப்பந்து (3) ரக்பி

53. மரச் செதுக்கல் வேலைப்பாடுகளுக்கு பிரசித்த பெற்ற இடம்
(1) எம்பக்க (2) சீகிரியா (3) யாப்பகூவ

54. இலங்கையில் தெங்கு உற்பத்தி நிலையம் அமைந்துள்ள இடம்
(1) அகலவத்தை (2) தலவாக்கலை (3) லுணுவில

55. இலங்கையின் முதலாவது பௌத்த மன்னன்
(1) தேவ நம்பிய தீசன் (2) துட்டகை முனு (3) பண்டுகாபயன்

56. பாலைவனக்கப்பல் என அழைக்கப்படும் பிராணி


(1)


(2)


(3)

57. பாலினால் தயாரிக்கப்படும் உற்பத்தி பொருள் அல்லாதது
(1) ஜாம் (2) தயிர் (3) பாற்கட்டி

58. ஒரு நாட்டுப் பொருளின் உற்பத்தியை இன்னுமொரு நாடு பெற்றுக்கொள்வதை குறிப்பது,
(1) ஏற்றுமதி (2) இறக்குமதி (3) மூலதனம்

59. இலங்கை நாட்டை நீண்ட காலம் ஆட்சி செய்த மேலேத்தேய நாட்டவர்?
(1) போர்த்துக்கேயர் (2) ஒல்லாந்தர் (3) ஆங்கிலேயர்

60. 'இலங்கையின் தேசிய இலச்சினை' பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இடம் பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

- .....
  .....
- .....
  .....
- .....
  .....

- * -**

www.ikedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2021

ஆசிரியர் : ஏ.எம். சனூஸ்

அறிவுத்தாரகை ARIVUTHTHARAHAI 5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL, 2021

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2021

மாதிரி வினாத்தாள் 8

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

வினாத்தாள் - I இற்கான புள்ளித்திட்டம்

1.	3	**11.**	28	**21.**	53	**31.**	78
2.	5	**12.**	30	**22.**	55	**32.**	80
3.	8	**13.**	33	**23.**	58	**33.**	83
4.	10	**14.**	35	**24.**	60	**34.**	85
5.	13	**15.**	38	**25.**	63	**35.**	88
6.	15	**16.**	40	**26.**	65	**36.**	90
7.	18	**17.**	43	**27.**	68	**37.**	93
8.	20	**18.**	45	**28.**	70	**38.**	95
9.	23	**19.**	48	**29.**	73	**39.**	98
10.	25	**20.**	50	**30.**	75	**40.**	100

85 - 100 மிக நன்று ☐

75 - 85 நன்று ☐

75 கீழ் - அதிகம் முயற்சிக்கவும் ☐

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

[பக். 2 ஐப் பார்க்க

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

● **1, 2** ஆகிய வினாக்களில் சோடிச் சொற்களுக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

1. அறிவு - பொழுதுபோக்கு



(1)



(2)



(3)

2. ஒளி - வெப்பம்



(1)




(2)




(3)

● **3, 4** ஆகிய வினாக்களில் பொருத்தமான தொடர்பு உள்ள உருச்சோடி இருக்கும் அடைப்பைத் தெரிவு செய்க.


3.



(1)



(2)



(3)


4.



(1)




(2)




(3)


5. அம்புக்குறிகளின் மூலம் காட்டப்படும் பாதைகளின் வழியே A இலிருந்து B வரைக்கும் மிகக்குறுகிய பாதையைக் காட்டும் உரு யாது?



(1)



(2)



(3)

www.ikedu.lk

சுட்டெண் : .....

6.

3	4	12
4	X	20
Y	6	36


இங்கு X, Y ஆகியவற்றின் பெறுமானங்கள் முறையே,

(1) **5, 9**

(2) **5, 6**

(3) **5, 12**

7. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.



(1)

(2)

(3)

● **8, 9** ஆகிய வினாக்களில் கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

8. 1 2 3 | 2 3 5 | 3 5 8 | .....

(1) 4 8 1 3 (2) 5 8 1 3 (3) 4 7 9

9. P Q R S | R Q P S | R S P Q | .....

(1) S P R Q (2) P S R Q (3) P Q R S


● **10, 11** ஆகிய வினாக்களின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

10. நண்பன் பட்டம் விட்டான். நண்பி பட்டாம் பூச்சி பிடித்தாள்.

நண்பன் : நண்பி எனின், பட்டம் : .....

(1) விட்டான் (2) பிடித்தாள் (3) பட்டாம் பூச்சி

11.



இற்கு

எனின்,



இற்கு .....

(1)



(2)




(3)



www.ikedu.lk

● **12, 13** ஆகிய வினாக்களுக்கு பின்வரும் தகவலைக் கொண்டு விடை தருக.

சிறு பிள்ளைகள் சைக்கிள் ஓடுவதற்காக ஒரு விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள சில பாதைகளைக் காட்டும் படம் கீழே தரப்பட்டுள்ளது. அதில் ஒவ்வொரு சிறிய சதுரத்தினதும் ஒரு பக்கத்தின் நீளம் 1 சென்ரிமீற்றராகும். (1சென்ரிமீற்றரினால் 10 மீற்றர் தூரம் காட்டப்படுகின்றது.)




12. ஒரு பிள்ளை A இலிருந்து ஆரம்பித்து K, L, B ஆகியவற்றைக் கடந்து C இற்குச் சென்று வலப்பக்கமாகத் திரும்பி முறையே E, F, M, L ஆகியவற்றைக் கடந்து D இற்கு வருகின்றது. அது சைக்கிள் ஓடும் தூரம் எத்தனை மீற்றர்?

(1) 210 மீற்றர் (2) 240 மீற்றர் (3) 280 மீற்றர்

13. ஒரு பிள்ளை I இலிருந்து ஆரம்பித்து K இனூடாக H இற்குச் சென்று இடப்பக்கமாகத் திரும்பி M இனூடாக F, E, C, B, J, D ஆகியவற்றைக் கடந்து மறுபடியும் I இற்கு வருகின்றது. அது சைக்கிள் ஓடும் போது இடப்பக்கமாக திரும்பிய தடவைகள் எத்தனை?

(1) 4 (2) 5 (3) 6

● எட்டு மாணவிகள் நடனம் ஆடுதல், பாட்டுப்பாடுதல், சித்திரம் வரைதல் என்னும் மூன்று கலைகளில் ஈடுபடும் விதம் உருவில் காணப்படுகின்றது. உருவைக் கொண்டு **14, 15** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.



14. மூன்று கலைகளிலும் ஈடுபடும் மாணவி யார்?

(1) கவிதா (2) ராணி (3) ரதி

15. இரண்டு கலைகளில் மாத்திரம் ஈடுபடும் மாணவிகள் யாவர்?

(1) கலா, கவிதா (2) சீலா, ரதி (3) கவிதா, ரதி

www.ikedu.lk

16. 1 தொடக்கம் 10 வரையுள்ள ஏதாவது இரண்டு ஒற்றை எண்களைப் பெருக்கும் போது,

(1) ஓர் ஒற்றை எண் கிடைக்கும்.

(2) ஓர் இரட்டை எண் கிடைக்கும்.

(3) ஒரு ஒற்றை அல்லது இரட்டை எண் கிடைக்கும்.

17. இலங்கைக்கு மேற்கே இங்கிலாந்தும் கிழக்கே யப்பானும் உள்ளன. இலங்கையில் நேரம் நண்பகல் 12.00 ஆக இருக்கும் போது,

(1) இங்கிலாந்தில் முற்பகலாக இருத்தல் வேண்டும்.

(2) யப்பானில் முற்பகலாக இருத்தல் வேண்டும்.

(3) யப்பான் இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளிலும் பிற்பகலாக இருத்தல் வேண்டும்.

18. A- வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா

B - மீனினம் ஓடிப் பறக்குதம்மா - ஊடே

C - மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா

D - வானுங் கடலாக மாறுதம்மா - இந்த

மேலேயுள்ள கவிதையின் வரிகள் ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளன. அர்த்தமுள்ள கவிதையாக அமையுமாறு ஆங்கில எழுத்துக்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்துக.

(1) B A D C (2) A B D C (3) B A C D

● ✡ = 2 △ = 3 ○ = 4 ▲ = 5 ● = 6

எனக் கொண்டு **19, 20** ஆகிய வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

19. ✡ + ▲ = ...

(1) △ + ○ (2) ● + ✡ (3) ○ + ✡

20. ▲ ▲ ✡ = ...

\- ✡ ✡ ●

(1) △△● (2) ✡△● (3) △✡●

21. △ ..... ⬠ ⬡ ⯃

ஒரே அளவான ஈர்க்குத் துண்டுகளைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ள இக்கோலத்தில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(1) (2) (3)

www.lkedu.lk


22. ○○△□■✻□ **= 3 5 5 2 8 8 9** ஆகும். உருக்களும் பெறுமானமும் ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளன. இதற்கேற்ப வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

□○✻■△ = ... ஆகும்.


(1) **5 8 3 2 9** (2) **5 8 3 2 5** (3) **9 8 3 2 5**

● **23, 24** ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள முதல் இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்றாக வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.

23.




உரு 1 உரு 2




(1) (2) (3)

24.




உரு 1 உரு 2



(1) (2) (3)

25.




இவ்வுருவில் உள்ள செவ்வகங்களின் எண்ணிக்கையும் முக்கோணிகளின் எண்ணிக்கையும் முறையே,

(1) செவ்வகங்கள் - 5, முக்கோணிகள் - 6
(2) செவ்வகங்கள் - 6, முக்கோணிகள் - 4
(3) செவ்வகங்கள் - 5, முக்கோணிகள் - 5

26. படித்த அனைவரும் அரச உத்தியோகத்தர்கள் அல்ல. அவ்வாறெனின்

(1) படிக்காத அனைவரும் வேறு தொழில் செய்பவர்கள் அல்ல.
(2) படித்த சிலர் அரசாங்க உத்தியோகம் பார்ப்பதில்லை.
(3) படித்த அனைவரும் சுயதொழில் செய்பவர்கள் ஆவர்.


27. உரு A இல் காட்டப்பட்டுள்ள கடதாசிக் கீற்றை இரண்டாக மடித்து மறுபடியும் இரண்டாக மடித்து எல்லா கடதாசிப் பகுதிகளும் அடங்குமாறு உரு B இல் உள்ளவாறு வெட்டி முற்றாக விரிக்கும்போது கிடைக்கும் விடை?




உரு A




உரு B



(1)



(2)




(3)

www.ikedu.lk

● கோலத்திற்கேற்ப 28, 29 ஆகிய வினாக்களின் வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

28.




(1) **5**

(2) **6**

(3) **7**

29.



(1) **30**

(2) **38**

(3) **34**

30. 2, 3, 5 ஆகிய மூன்று எண்களாலும் ஆக்கக் கூடிய மிகப்பெரிய எண்ணிணதும் மிகச்சிறிய எண்ணிணதும் நடுவில் வரும் எண் ஒரு,

(1) ஓர் ஒற்றை எண்ணும் சதுர எண்ணுமாக அமையும்.

(2) ஓர் ஒற்றை எண்ணாகவும் முக்கோண எண்ணாகவும் அமையும்.

(3) ஓர் ஒற்றை எண்ணாகவும் இரண்டால் மீதியின்றி வகுபடக் கூடிய எண்ணுமாகும்.

31. யாழினியின் தற்போதைய வயது 12 ஆகும். அவளுடைய தாயாரின் தற்போதைய வயது யாழினியின் வயதின் மூன்று மடங்கிலும் பார்க்க மூன்று குறைவாகும். இன்னும் இரண்டு வருடங்களில் தாயாருடைய வயது யாது?

(1) 41 (2) 39 (3) 35

32. குறித்த வருடமொன்றின் 91 ஆம் நாள் வியாழக்கிழமையாகும். 180 ஆம் நாள் என்ன கிழமை?

(1) செவ்வாய்க்கிழமை ஆகும். (2) புதன்கிழமை ஆகும். (3) வெள்ளிக்கிழமை ஆகும்.

33. ஒரு குறித்த ஆண்டின் செப்டம்பர் மாதம் 15ஆம் திகதி புதன்கிழமையாகும். அவ்வாண்டின் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி என்ன கிழமை?

(1) புதன் கிழமை (2) வியாழக்கிழமை (3) வெள்ளிக்கிழமை

34. ஒரு ஓட்டப்பந்தயத்தில்

* தவம் சிவாவிலும் வேகமாக ஓடினான்.
* சிவா ஹுஸைனை விட மெதுவாக ஓடினான்.
* ஹுஸைன் தவத்தை விட வேகமாக ஓடினான்.

மிக வேகமாக ஓடியவரையும், மிக மெதுவாக ஓடியவரையும் முறையே கூறினால்,

(1) ஹுஸைன், சிவா (2) சிவா, ஹுஸைன் (3) ஹுஸைன், தவம்

35. ஒருவர் 50 வினாக்களைக் கொண்ட வாய்மொழி வினாப்போட்டியில் கலந்து கொள்கிறார். இவர் சரியாக பதிலளிக்கும் ஒரு வினாவுக்கு 4 புள்ளிகள் வழங்கப்படும். பிழையாகப் பதிலளிக்கும் ஒரு வினாவுக்குப் பெற்ற புள்ளியிலிருந்து 2 புள்ளிகள் குறைக்கப்படும். எனில், 140 புள்ளிகளைப் பெறும் ஒருவர் எத்தனை வினாக்களுக்கு சரியாக விடையளித்திருப்பார்? எத்தனை வினாக்களுக்கு தவறாக பதிலளித்திருப்பார்?

(1) சரியான வினாக்கள் - 40, தவறான வினாக்கள் - 10

(2) சரியான வினாக்கள் - 35, தவறான வினாக்கள் - 15

(3) சரியான வினாக்கள் - 44, தவறான வினாக்கள் - 6

www.ikeou.lk

36. ஒரு பேருந்துத் தரிப்பிடத்திலிருந்து

* ஒவ்வொரு 30 நிமிடத்திற்கு ஒரு தடவை கொழும்புக்கு ஒரு பேருந்து புறப்படுகிறது.
* ஒவ்வொரு 45 நிமிடத்திற்கு ஒரு தடவை அனுராதபுரத்திற்கு ஒரு பேருந்து புறப்படுகிறது.
* விடியற்காலை 5.30 இற்கு முதல் இரு பேருந்துகளும் கொழும்புக்கும் அனுராதபுரத்திற்கும் புறப்பட்டுச் செல்கின்றன.

மறுபடியும் இரு பேருந்துகளும் கொழும்புக்கும் அனுராதபுரத்துக்கும் எத்தனை மணிக்கு ஒருமித்து புறப்பட்டுச் செல்லும்?

(1) மு.ப. 6.45 (2) மு.ப 7.00 (3) மு.ப 7.30

37. மின்சாரப் பாவனைக்கட்டணம் கணக்கிடும் போது முதல் அலகு 30 இற்கு ரூபா 1.00 வீதமும், அடுத்த 15 அலகுகளுக்காக ஓர் அலகுக்கு ரூபா 2.00 வீதமும், அதற்கடுத்த ஓர் அலகுக்கு ரூபாய் 3.00 வீதமும் அறவிடப்படும். அதற்கமைய மின்சார அலகுகள் 60 இற்கு அறவிட வேண்டிய மொத்தப்பணம் எவ்வளவு?

(1) ரூபா 100.00 (2) ரூபா 105.00 (3) ரூபா 120.00

● **38, 39** ஆகிய வினாக்களுக்கு பின்வரும் தகவலை அடிப்படையாகக் கொள்க.

A, B, C என்னும் மூன்று மரங்களில் பறவைகள் பின்வருமாறு இருக்கின்றன.

* மரம் C இல் இருக்கும் எண்ணிக்கையிலும் பார்க்க இரு மடங்கு பறவைகள் மரம் B இல் இருக்கின்றன.
* B, C ஆகிய இரு மரங்களிலும் உள்ள பறவைகளின் மொத்த எண்ணிக்கை மரம் A இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கைக்குச் சமம்.
* மரம் B இலிருந்து ஒரு பறவை மரம் C இற்குப் பறந்து செல்லும் போது மரம் B இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கை 7 ஆகும்.

38. மரம் A இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கை யாது?

(1) 12 (2) 11 (3) 9

39. மூன்று மரங்களிலும் உள்ள பறவைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 12 (2) 16 (3) 24

40. பத்திலும் குறைந்த ஓர் ஒற்றை இலக்கத்தை நினைத்துக் கொள்க.

* அதனுடன் மூன்றைக் கூட்டுக.
* அதனை இரண்டால் வகுக்க.
* இப்போது மூன்றினால் பெருக்குக.
* அதிலிருந்து மூன்றைக் கழிக்குக.

கிடைக்கும் விடை 15 எனின் நீர் முதலில் நினைத்த எண் யாது?

(1) 5 (2) 7 (3) 9

- * -**

www.ikeau.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2021

ஆசிரியர் : ஏ.எம். சஜாஸ்

அறிவுத்தாரகை 5
ARIVUTHTHARAHAI

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL, 2021

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2021

மாதிரி வினாத்தாள் 8

வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.** (சில வினாக்களில் உப பகுதிகள் உள்ளன.)
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **கோட்டினை மாத்திரம் இடுக.**
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

வினாத்தாள் - IIஇற்கான புள்ளித்திட்டம்

1.	6	11.	2	21.	2
2.	2	12.	2	22.	2
3.	2	13.	2	23.	1, 2
4.	2	14.	1	24.	2
5.	2	15.	1	25.	2
6.	1	16.	2	26.	2
7.	1	17.	2	27.	3
8.	2	18.	2	28.	4
9.	1	19.	2	29.	4
10.	1	20.	2	30-59	30

85 - 100 மிக நன்று	
75 - 85 நன்று	
75 கீழ் - அதிகம் முயற்சிக்கவும்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/II/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/II/T/CH

www.ikeduk

[பக். 2 ஐப் பார்க்க

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

1. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.

மொழியைப் பேசுவது மனிதனுக்குரிய சிறப்புகளில் ஒன்று. தமது எண்ணங்களையும் உணர்வுகளையும் பிறருக்கு அறியச் செய்வது மொழியாகும். உலகில் ஆயிரக்கணக்கான மொழிகள் உள்ளன. அவற்றுள் சில மொழிகளே செம்மொழியாகப் புகழ்பெற்றுள்ளன. அம்மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்றாகும். தமிழுக்கு முத்தமிழ் எனும் சிறப்புப் பெயரும் உண்டு. இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனும் முத்தமிழையும் தன்னகத்தே கொண்ட சிறப்புக்குரிய மொழி இதுவாகும். முத்தமிழானது மனிதர்களின் எண்ணம், உள்ளம், உணர்வு ஆகிய மூன்றையும் ஒன்றிணைத்து வாழ்வை நல்வழிப்படுத்துகிறது.

- **பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.**

(i) மொழி என்பது யாது?

: .....

(ii) தமிழ் மொழி எம்மொழியாக புகழ் பெற்றுள்ளது?

: .....

(iii) முத்தமிழ் எவை?

: .....

(iv) முத்தமிழ் மனிதர்களது வாழ்வை எவ்வாறு வெளிப்படுத்துகிறது?

: .....

(v) 'இகழ்' என்பதன் எதிர்ச் சொல்லை எழுதுக?

: .....

(vi) பந்தியில் இடம்பெறும் நிகழ்கால வினைச் சொல்லை எழுதுக?

: .....

2. அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து வெற்றிடத்தை நிரப்புக.

(i) மாணவர் தமது ..... களைச் சிறப்பாகச் செய்தனர். (பனி / பணி)

(ii) ஒளியைப் பரப்புவது ..... (விளக்கு / விலக்கு)

3. பின்வரும் வாக்கியத்தை ஒருமையாக மாற்றி எழுதுக.

(i) விளையாட்டு வீரர்கள் மைதானத்தில் நின்றனர்.

: .....

(ii) பின்வரும் வாக்கியத்தை பன்மையாக மாற்றி எழுதுக.
குளத்தில் மீன் நீந்தியது.

: .....

4. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தைத் தெரிவு செய்க.

(i) கைகூடுதல் ..... (நிறைவடைதல் / சொன்ன சொல் தவறுதல்)

(ii) கதை வளர்த்தல் .....(ஆசையை வளர்த்தல் / பேச்சை விரித்தல்)

5. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக.

(i) ஒரு நூலை வெளியிடுவோர் அந்நூலைப் பற்றி கூறும் உரை .....
(அணிந்துரை / பதிப்புரை) ஆகும்.

(ii) முனிவர்கள் வசிக்கும் இடம் ..... (பன்னசாலை / ஆச்சிரமம்) எனப்படும்.

www.ikeou.lk

சுட்டெண் : .....

6. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

கண்டு கழித்தல் என்பதன் பொருள் யாது

7. சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.

கற்றுக் / கோபத்தைக் / வாழலாம் / கொண்டால் / கட்டுப்படுத்தக் / சிறப்பாக

: .....

8. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

(i) உண்ணாச் சொத்து மண்ணாப் போகும்.

: .....

(ii) குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி மங்காது.

: .....

9. பின்வரும் தனி வாக்கியத்தை தொடர் வாக்கியமாக எழுதுக.

அழ. வள்ளியப்பா பாடல்களை இயற்றினார்.
அழ. வள்ளியப்பா கவிதைகளை இயற்றினார்.

: .....

10. தரப்படும் ஆத்தி சூடியின் பொருளை தெரிவு செய்க.

சித்திரம் பேசேல் (அறியாமையைப் போக்கு / பொய்யானவற்றை மெய்போல் பேசாதே)

11. தரப்படும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

(i) Ring : .....

(ii) Books : .....

12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i)  : .....

(ii)  : .....

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களை சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

(i) drinking / I / Water / am : .....

(ii) this? / what / is : .....

14. 'பந்திய' எனும் சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.


: .....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை தமிழில் எழுதுக.

தண்ணீர் தாருங்கள் : .....

16. தரப்படும் எண்ணை அருகிலுள்ள எண் சட்டத்தில் குறித்துக் காட்டுக.

5 4 2 1



www.lkedu.lk

17. "இருபத்தாறாயிரத்து நூற்று நாற்பத்தேழு" என்பதை இலக்கத்தில் எழுதுக.

: .....

18. 35421 என்ற எண்ணில்,

(i) இலக்கம் 4 உள்ள இடம் : .....

(ii) அவ்விடத்து எண்ணின் இடப்பெறுமானம் : .....

19. A, B, C ஆகிய மூன்று பாடசாலையில் கற்கும் மாணவர் தொகைகள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

பாடசாலை	மாணவர் தொகை
பாடசாலை A	2138
பாடசாலை B	1986
பாடசாலை C	892

(i) பாடசாலை A, பாடசாலை B ஆகிய இரண்டு பாடசாலைகளிலும் கற்கும் மொத்த மாணவர் தொகை யாது?

: .....

(ii) பாடசாலை A, B மற்றும் பாடசாலை C ஆகிய பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

: .....

20.

6	11	16
1	21	26


கட்டத்தினுள் உள்ள எல்லா எண்களையும் பயன்படுத்தி பொது வித்தியாசம் 5 ஆகவுள்ள எண் கோலமொன்றை ஆக்கி எழுதுக?

: .....

21. ஒரு தோட்டத்திலிருந்து யூலை, ஆகஸ்ட் மாதங்களில் பறித்த தேங்காய்களின் எண்ணிக்கை முறையே, 5387 உம் 6578 உம் ஆகும். இரண்டு மாதங்களிலும் பறித்த தேங்காய்களின் எண்ணிக்கைகளுக்கு இடையிலான வித்தியாசம் யாது?

: .....

22.




(i) அருகிலுள்ள தளவடிவத்தில் $\frac{4}{10}$ பங்கை பென்சிலால் அல்லது பேனையால் நிறந்தீட்டுக.

(ii) நிழற்றப்படாத பகுதியை தசம எண்ணாக சொற்களில் எழுதுக.

: .....

23.



அருகிலுள்ள கடிகாரத்தில்,

(i) '3 மணிக்கு 15 நிமிடம்' கடிகார முகப்பில் குறிக்க.

(ii) நீங்கள் குறித்த நேரத்தை 24 மணித்தியால கடிகாரத்தில் பிற்பகல் நேரமாக எழுதுக.

: .....

www.ikedu.lk

24. நகரங்களுக்கு இடையிலான தூரங்கள் குறிக்கப்பட்ட தேசப்படமொன்று கீழே தரப்பட்டுள்ளது.



(i) கொழும்பு தொடக்கம் புத்தளம் வரையிலான தூரம் எவ்வளவு?

: ..... கிலோமீற்றர்

(ii) நீர் கொழும்பிலிருந்து மங்கள எலியாவுக்கு உள்ள தூரம் எவ்வளவு?

: ..... கிலோமீற்றர்

25. பின்வரும் பிரசினங்களைத் தீர்க்க.

(i)

Kg	g
4	50
+ 2	75

(ii)

g	mg
3	85
- 1	500

26. ஒரு மோட்டார் வாகன எரிபொருள் தொட்டியில் பயண ஆரம்பத்தின் போது 20 ℓ 500 ml எரிபொருள் அடங்கியிருந்தது. பயண முடிவில் 12 ℓ 850 ml எரிபொருள் மீதியாக இருந்தது. இப்பயணத்திற்கு செலவாகிய எரிபொருளின் அளவு யாது?

: .....

27. தாயக்கட்டை, செங்கல் போன்ற திண்மப் பொருள்களைப் பயன்படுத்தி பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.

திண்மப் பொருள்	விளிம்புகளின் எண்ணிக்கை	முகப்புகளின் எண்ணிக்கை	உச்சிகளின் எண்ணிக்கை
தாயக்கட்டை	.....	.....	.....
செங்கல்	.....	.....	.....

28. 3 கிலோகிராம் அரிசிப்பொதியொன்றின் விலை ரூபாய் 309 ஆகும். சுதன் 500 ரூபாய் காசுத்தாளுடன் கடைக்குச் சென்றான்.

(i) கடையில் 1 கிலோ கிராம் அரிசியின் விலை யாது?

: .....

(ii) ஒரு கிலோ கிராம் அரிசியை வாங்கிக் கொண்டு 500 ரூபாய் காசுத்தாளை சுதன் வழங்கும்போது, கடைக்காரன் மேலும் 3 ரூபாய் பணத்தைப் பெற்றுக்கொண்டு மீதியை வழங்கினான்.

(அ) சுதன் கடைக்காரனுக்கு வழங்கிய மொத்தப்பணம் எவ்வளவு?


: .....

(ஆ) சுதனுக்கு கடைக்காரன் வழங்கிய மீதிப்பணம் எவ்வளவு?

: .....

www.ikedu.lk

29. ஒரு மாணவர் குழுவானது விரும்பும் செல்லப் பிராணிகள் பற்றிய வரைபு கீழே தரப்பட்டுள்ளது.



(i) கூடுதலான தொகை மாணவர் விரும்பும் செல்லப் பிராணி எது?

: .....

(ii) அணிலை விரும்பும் மாணவர் எத்தனை பேர்?

: .....

(iii) இரண்டு கால் உள்ள செல்லப்பிராணிகளை விரும்புவோர் எத்தனை பேர்?

: .....

● **இலக்கம் 30 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையை தரப்படும் விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. பின்வரும் இலைகளில் மாலை நேரத்தில் இலைகள் சுருங்கும் தாவரம்
(1) முருங்கை (2) புளி (3) அகத்தி

31. அசுத்தமான சமயலறையில் பெரும்பாலும் காணக்கூடிய பூச்சி
(1) எலி (2) கரப்பான் (3) பாம்பு

32. தாவர இலைகளை சேதமாக்கும் பிராணி
(1) சிலந்தி (2) கரப்பான் (3) நத்தை

33. தொலைவில் உள்ள இரையைக் கண்டு அதனைப் பிடிக்கும் ஆற்றல் கூடுதலாக உள்ள பறவை
(1) பருந்து (2) கொக்கு (3) காகம்

34. வீட்டுத் தோட்டத்தில் பயிர்ச்செய்கைக்குத் தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் வருவதைத் தடுப்பதற்கு வளர்க்கப்படும் தாவரமும் அதன் நிறமும்
(1) துளசி – வெள்ளை (2) செவ்வந்தி – மஞ்சள் (3) ரோசா – சிவப்பு

35. பயிர்களை வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் மாற்று முறைகளில் அனுகூலமாக அமையாதது.
(1) இடவசதி உள்ள இடத்தில் மாத்திரம் பயிரிடத்தக்கதாக இருத்தல்.
(2) எளிதாக பராமரிக்கத்தக்கதாக இருத்தல்.
(3) தேவைப்படும் போது அங்கும் இங்கும் மாற்றக் கூடியதாக இருத்தல்.

36. உடல் வளர்ச்சியில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும் போசணைக் கூறு
(1) மாப்பொருள் (2) விற்றமின்கள் (3) புரதம்

www.lkedu.lk

37. இயற்கையாக கிடைக்கக்கூடிய சுவையான பானம்

(1) தேயிலை (2) எலுமிச்சம் சாறு (3) இளநீர்

38. பின்வருவனவற்றுள் குறைந்த காலம் காலாவதித் திகதி பொறிக்கப்பட்ட பொருள்.

(1) 

(2) 

(3) 

39. சோறு சமைப்பதற்கா அரிசியைக் களைவதற்கு மிகப் பொருத்தமான பாத்திரம்

(1) அரிக்குஞ்சட்டி (2) மட்கோப்பை (3) பெரிய மட்பானை

40. 

இக்குறியீடு குறிப்பது

(1) குப்பைகளை இங்கே போடக்கூடாது.

(2) குப்பைகளை இங்கே போடவும்.

(3) உக்கக்கூடிய கழிகளை மட்டும் போடவும்.

41. பரீட்சை நடவடிக்கைகள் தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிக்க தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்?

(1) 1977 (2) 1911 (3) 119

42. இலங்கை பத்து ரூபாய் நாணயக்குற்றியில் பொறிக்கப்பட்டுள்ள சின்னத்தையும் மாவட்டத்தையும் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) சிவனொலி பாதமலை – நுவரெலியா

(2) பின்னவல யானைகள் சரணாலயம் - கேகாலை

(3) சீகிரியா ஓவியம் - அனுராதபுரம்

43. இலங்கையை ஆட்சிசெய்த மேலை நாட்டவரையும் அவர்கள் ஆட்சி செய்த காலப் பகுதியையும் சரியாகக் காட்டும் விடை யாது?

(1) போர்த்துக்கேயர் - (கி.பி 1505 - கி.பி 1796 வரை)

(2) ஒல்லாந்தர் - (கி.பி 1658 - கி.பி 1796 வரை)

(3) பிரித்தானியர் - (கி.பி 1796 - கி.பி 1815 வரை)

44. இலங்கை தேசப்படத்தில் உயர்ந்த நிலத்தையும் தாழ்ந்த நிலத்தையும் காட்டும் படத்தில், உயர்ந்த நிலம் தீட்டப்பட்டிருக்கும் நிறம்

(1) கபில நிறம் (2) கறுப்பு நிறம் (3) பச்சை நிறம்

45. இலங்கை தேசியக் கொடியில் செம்மஞ்சள் நிறப்பட்டி குறிப்பது,

(1) இந்நாட்டில் வாழும் முஸ்லிம் மக்களை

(2) இந்நாட்டில் வாழும் மக்களின் தேசிய ஒற்றுமையை

(3) இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களை

46. சுதந்திர இலங்கையின் தற்போதைய சனாதிபதி யார்?

(1) 

(2) 

(3) 

47. ருவன்வெலிசாய தூபியை அமைத்த மன்னன்

(1) தேவ நம்பிய தீசன் (2) வலகம்பா (3) துட்டகை முனு

48. 1818 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டு மரண தண்டனையை தைரியமாக ஏற்று உயிரை நீத்தவர்?

(1) கொங்காலகொட பண்டா

(2) மொனரவில கெப்பட்டிபொல திசாவை

(3) கலாநிதி. ஆனந்த குமார சுவாமி

www.lkedu.lk

49. பண்டைய போக்குவரத்துச் சாதனங்களுள் ஒன்று

(1) பேருந்து (2) பல்லக்கு (3) ஆகாய விமானம்

50. மனிதன் சுவாசிப்பதற்கு பொருத்தமான வாயு யாது?

(1) ஐதரசன் வாயு (2) ஒட்சிசன் வாயு (3) காபனீரொட்சைட் வாயு

51. உயரமான கட்டடத்தில் இருந்து விலா எலும்பு உடைந்த நபரொவருக்கு அளிக்கக் கூடிய முதலுதவி.

(1) நபரை அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லல்.

(2) நபரை அசைக்காது சமதள இடத்தில் வைத்தல்.


(3) உடைந்த பகுதியில் மருந்து வகையை பூசுதல்.

52. சூரிய நமஸ்காரப் பயிற்சியின் ஏழாம் கட்டத்தைக் காட்டும் உரு யாது?

(1) 

(2) 

(3) 

53. 

இவ்வுருவில் உள்ளவாறு வீட்டு முற்றத்தில் சதுரங்கள் வரையப்பட்டு விளையாடும் விளையாட்டு

(1) சில்லுக்கோடு (2) எட்டுக்கோடு (3) சடுகுடு

54. துவிச்சக்கர வண்டிகளில் பொருத்தப்பட்டிருக்கும் தைனமோ மூலம் பெறப்படும் அனுகூலம்

(1) வேகத்தை கட்டுப்படுத்த உதவுதல்.

(2) ஒளியை பெற உதவுதல்.

(3) துவிச்சக்கர வண்டி செல்லும் திசையை அறிய உதவுதல்.

55. மீனவர் தமது மீன்பிடித் தொழிலுக்காக பயன்படுத்தும் உபகரணங்களைக் கொண்ட கூட்டம்

(1) கரப்பு, அத்தாங்கு, வீச்சுவலை

(2) தூண்டல், நங்கூரம், கலப்பை

(3) இறப்பர் சப்பாத்து, அத்தாங்கு, கரப்பு

56. எரிந்து கொண்டிருக்கும் தணல் உள்ள நெருப்பில் காய்ந்த உப்புக்கட்டியை இடும்போது நடைபெறுவது

(1) உப்புக்கட்டி உருகுதல்

(2) உப்புக்கட்டி சத்தத்துடன் வெடித்தல்

(3) உப்புக்கட்டி எரிதல்

57. காந்த துண்டை நோக்கி கவரப்படும் பொருள் சோடி

(1) இரும்பும் உருக்கும் (2) இரும்பும் அலுமினியமும் (3) பித்தளையும் இரும்பும்

58. கையில் ஒட்டிய பலாக்காய்ப் பசையை நீக்குவதற்கு பொருத்தமான திரவம்

(1) சவர்க்காரம் (2) மண்ணெண்ணெய் (3) வெந்நீர்

59. பிறப்பு, மற்றும் இறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு செல்லவேண்டிய இடம்

(1) பிரதேச சபை

(2) குடிவரவு, குடியகழ்வு திணைக்களம்

(3) பிரதேச செயலகம்

60. 'வனங்களை அழிப்பதனால் ஏற்படும் தீமைகள்' பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இடம் பெறவேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

- .....

.....

- .....

.....

- .....

.....

www.lkedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි]
முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

2021

ஆசிரியர் : ஏ.எம். சனூஸ்

அறிவுத்தாரகை 5
ARIVUTHTHARAHAI

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL, 2021

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை, 2021

மாதிரி வினாத்தாள் 9

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

வினாத்தாள் - I இற்கான புள்ளித்திட்டம்

1.	3	**11.**	28	**21.**	53	**31.**	78
2.	5	**12.**	30	**22.**	55	**32.**	80
3.	8	**13.**	33	**23.**	58	**33.**	83
4.	10	**14.**	35	**24.**	60	**34.**	85
5.	13	**15.**	38	**25.**	63	**35.**	88
6.	15	**16.**	40	**26.**	65	**36.**	90
7.	18	**17.**	43	**27.**	68	**37.**	93
8.	20	**18.**	45	**28.**	70	**38.**	95
9.	23	**19.**	48	**29.**	73	**39.**	98
10.	25	**20.**	50	**30.**	75	**40.**	100

85 - 100 மிக நன்று ☐

75 - 85 நன்று ☐

75 கீழ் - அதிகம் முயற்சிக்கவும் ☐

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

www.keedu.lk

[பக். 2 ஐப் பார்க்க





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L


76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன


www.learneasy.lk || www.lkedu.lk

● 1, 2 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களில் ஓர் உரு ஏனைய இரண்டு உருக்கிளிலுருந்தும் வேறுபட்டது அவ்வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.


1.



(1)




(2)




(3)

2.



(1)



(2)



(3)

● 3, 4 ஆகிய வினாக்களில் கட்டத்தினுள் உள்ளே இருந்து வெளியே எடுப்பதற்கு மிகவும் பொருத்தமான உரு யாது?

3.





(1)




(2)




(3)

4.





(1)



(2)



(3)

5. கட்டத்தில் உள்ள எழுத்துக்களை அவதானியுங்கள்.

அ A இ

ஒ K B

கட்டம் தொடர்பாக கூறக்கூடிய பொதுவான இயல்பு

(1) இவை தமிழ் உயிர் எழுத்துக்களும் ஆங்கில உயிர் எழுத்துக்களுமாகும்.

(2) இவை எழுத்துக்களாகும்.


(3) இவை உயிர் எழுத்துக்களாகும்.


www.ikedu.lk

சுட்டெண் : .....

● **6, 7** ஆகிய வினாக்களில் வெறுமையான கட்டத்திற்கு வரவேண்டிய உருவக் கட்டத்தைத் தெரிவு செய்க.


6.






(1) (2) (3)


7.





(1) (2) (3)

8. தரப்பட்டுள்ள எண்கோலத்தில் புள்ளிக் கோடிட்ட இடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.



(1) 18 (2) 19 (3) 20

9. 1 தொடக்கம் 50 இற்கு இடைப்பட்ட எண்களுள் 4, 6 ஆகிய எண்களால் வகுபடும் எண்கள் எவை?

(1) 6, 12, 18, 24, 30, 36, 42, 48 ஆகிய எண்கள் மட்டும்

(2) 24, 48 ஆகிய எண்கள் மட்டும்

(3) 12, 24, 36, 48 ஆகிய எண்கள் மட்டும்

10. 

அருகில் நான்கு சதுரக்கட்டங்களினால் அமைக்கப்பட்ட செவ்வக வடிவம் ஒன்று உள்ளது இதில் அமைக்கக்கூடிய செவ்வக அமைப்புக்கள் எத்தனை?

(1) 1 (2) 4 (3) 6

11. அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும் என்ற கருத்தைத் தரும் பழமொழி,


(1) அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறி.

(2) சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.

(3) இளங்கன்று பயமறியாது.

www.ikedu.lk

12. பின்வரும் தாயக்கட்டையில் எதிர்ப்பக்கங்களின் கூட்டுத் தொகை 24 ஆக அமையக் கூடிய இரு எண்களும் எவை?



(1) 11, 13 (2) 10, 14 (3) 11, 15

● **13, 14** ஆகிய வினாக்களுக்கு பின்வரும் விபரத்தைப் பயன்படுத்தி விடையைத் தெரிவு செய்க.

எனது பெயர் சேகர், நான் வகுப்பு முடிவடைந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்தேன். வீதியின் பக்கத்தில் ஒரு பேருந்து தரிப்பிடத்தில் சிறிய தாயாரும் சிறிய தந்தையாரும் நின்று கொண்டிருந்தனர். அவர்களுடைய மகள் சுசீலா வகுப்பு முடிவடைந்து வரும் வரைக்கும் அங்கே காத்திருந்தனர். அவர்கள் என்னைக் காணவில்லை. அந்நேரத்தில் ஒரு பேருந்து தரிப்பிடத்திற்கு அண்மையில் நிறுத்தப்பட்டது. அலுவலக வேலை முடிவடைந்து வருபவர்கள் அப்பேருந்தில் நிறைந்து இருந்தனர். தங்கை சுசீலா அப்பேருந்திலிருந்து இறங்கி வந்தார்.

13. பின்வரும் கூற்றுக்களிடையே சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) சேகர் தரம் ஐந்தில் கற்கும் மாணவன் எனக் கூறலாம்.

(2) சுசீலா தரம் நான்கில் கற்கும் மாணவி எனக் கூறலாம்.

(3) அவர்கள் இருவரும் கற்கும் தரங்கள் பற்றிக் கூறுவது கடினம்.


14. பின்வரும் கூற்றுக்களிடையே பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

(1) சேகரின் தந்தை சுசீலாவின் தந்தையின் தமையனாக இருக்கலாம்.

(2) சுசீலாவின் தாயார் சேகரின் தாயாரின் தங்கையாக இருக்கலாம்.

(3) சுசீலாவின் தாயார் சேகரின் தந்தையின் தங்கையாக இருக்கலாம்.

15.





இம்முக்கோண வலையமைப்பில்

இவ்வாறு அமைக்கக்கூடிய பகுதிகள் எத்தனை?

(1) 5 (2) 6 (3) 7

16. சாதாரண வருடமொன்றின் நடுநாள் புதன்கிழமை எனின், இவ்வருடம் முதலாம் நாள் யாது?

(1) புதன் கிழமை (2) வியாழக் கிழமை (3) செவ்வாய்க் கிழமை

17. ஒலிம்பிக் போட்டி நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும். 31 வது ஒலிம்பிக் போட்டி 2016 ஆம் ஆண்டு நடைபெற்றது எனின், 25 வது ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற ஆண்டு யாது?

(1) 2010 (2) 1992 (3) 1996

18. இன்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன் லீனாவின் வயது அவளுடைய அண்ணாவின் வயதின் அரைவாசியாகும். அண்ணாவின் தற்போதைய வயது பத்து ஆகும். இன்னும் நான்கு வருடங்களில் லீனாவின் வயதானது,


(1) 8 ஆகும் (2) 10 ஆகும் (3) 12 ஆகும்

19. ஒரு பேருந்தில் உள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கை அதில் உள்ள பெண் பயணிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். அடுத்த தரிப்பிடத்தில் 4 பெண்கள் பேருந்தில் ஏறிய பின்னர் ஆண்களின் எண்ணிகையும் பெண்களின் எண்ணிக்கையும் சமமாகும். இப்போது பேருந்தில் உள்ள மொத்த பயணிகளின் எண்ணிக்கை யாது?

(1) 8 (2) 12 (3) 32

www.lkedu.lk


20. உருவில் ஆறு ஈர்க்குத் துண்டுகள் உள்ளன.




அவ்ஆறு ஈர்க்குத் துண்டுகளையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க வடிவத்தைக் காட்டும் உரு யாது?



(1)



(2)



(3)

21. முரளி ரவிக்கு முன்னரே விளையாட்டு மைதானத்திற்கு வந்த அதேவேளை ரவிக்குப் பின்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். மோகன் ரவிக்குப் பின்னரே மைதானத்திற்கு வந்த அதே வேளை முரளிக்கு முன்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். கூடுதலான நேரம் மைதானத்தில் இருந்தவர் யார்?

(1) மோகன் (2) முரளி (3) ரவி

22. சரியான கோவையைத் தெரிவு செய்க.

(1) 1 x 1 x 111 x 1 x 111 = 11111

(2) 1 x 1 x 11 x 1 x 111 = 1221

(3) 11 x 1 x 11 x 1 x 11 x 0 = 1331

23. உட்பக்கம் தெரியாத பெட்டியொன்றில் ஐந்து நீல நிறப்பந்துகளும் ஐந்து சிவப்பு நிறப்பந்துகளும் மற்றும் ஐந்து ஊதா நிறப்பந்துகளும் உள்ளன. பந்துகளைப் பார்க்காமல் ஒரே நிறத்திலான மூன்று பந்துகளைத் தவறாமல் பெறுவதற்கு பெட்டியிலிருந்து வெளியே எடுக்கப்பட வேண்டிய பந்துகளின் குறைந்த பட்ச எண்ணிக்கை யாது?

(1) 4 (2) 5 (3) 7

● **24, 25** ஆகிய வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைக் கொண்டு விடை தருக.
ஒரு நிரையின் மத்தியில் எட்டாவதாக அமலன் நின்றான். அமலனுக்கு முன்னால் மூன்றாவதாக கமலன் நின்றான். கமலனுக்கு பின்னால் நான்காவதாக விமலன் நின்றான். இதற்கேற்ப,

24. அந்நிரையில் மொத்தமாக எத்தனை பேர் உள்ளனர்?

(1) 15 (2) 16 (3) 17

25. அமலனுக்கு அருகில் நிற்பவர் யார்?

(1) கமலன் (2) விமலன் (3) கூற முடியாது

26. பின்வரும் எழுத்துக்கள் மீது மையை பூசி, அவ்விலக்கங்கள் எதிரே அச்சிடப்படுமாறு புள்ளிக்கோடு வழியே தாளை இரண்டாக மடித்து, விரிக்கும் போது கிடைக்கும் விடை யாது?





(1)



(2)



(3)

27. 1 தொடக்கம் 9 வரையுள்ள எண்களுள் அடுத்தடுத்துள்ள எண்களால் அமைக்கக்கூடிய மூன்றிலக்க பெரிய எண்ணிக்கையினதும், மூன்றிலக்க சிறிய எண்ணினதும் கூட்டுத்தொகை?

(1) 1110 (2) 1776 (3) 1099

www.ikedu.lk

28. ஒரு வியாபாரியிடம் ஒரு தொகைப் பணம் காணப்பட்டது. அதனை பங்குகளாகப் பிரித்து முதல் பங்கை குடும்ப செலவுக்கும், முதல் பங்கைப் போல் இரு மடங்கு பங்கை வங்கியிலும், வங்கியில் இட்ட பங்கைப் போல் மூன்று மடங்குப் பணத்தை கடனையும் செலுத்தி முடித்தார். வங்கியில் இட்ட பணம் 3000 ரூபாய் ஆகும். வியாபாரியிடம் ஆரம்பத்தில் இருந்த மொத்தப்பணம் எவ்வளவு?

(1) 15000 ரூபாய் (2) 13500 ரூபாய் (3) 10500 ரூபாய்

29. வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

உரல் : உலக்கை எனின், அம்மி : .....

(1) துருவிலை (2) குளவி (3) அகப்பை

30. பத்தொன்பதாயிரத்து நூற்றிருபத்தாறு என்ற இலக்கங்களை ஏறுவரிசைப் படுத்தி எழுதினால் அமையப்பெறும் எண் யாது?

(1) பன்னிரண்டாயிரத்து நூற்று அறுபத்தொன்பது
(2) தொண்ணூற்றாராயிரத்து இருநூற்றுப் பன்னிரண்டு
(3) பதினொராயிரத்து இருநூற்று அறுபத்தொன்பது

31. தரப்படும் கணிதச் செய்கையில் ஆங்கில எழுத்துக்கள் குறித்து நிற்கும் இலக்கங்கள் முறையே காட்டுவது,


N	P	N	10
P	N	P	11
7	7	7	21

(1) **N - 4, P - 3**
(2) **P - 4, N - 3**
(3) **P - 3, N - 4**

32. அடுத்துள்ள இரண்டு இரட்டை எண்களின் கூட்டுத்தொகையானது இவ்விரண்டு இரட்டை எண்களுக்கும் முந்திய ஒற்றை எண்களின் கூட்டுத்தொகையிலும் பார்க்க,

(1) இரண்டு கூடுதலானது.
(2) இரண்டு குறைவானது.
(3) இரண்டும் சமமானது.

33. கீழே தரப்பட்டுள்ள இரு உருக்களுக்கும் ஏற்ப (A) அளவுள்ள ஓர் அட்டைத்தாளிலிருந்து (B) அளவுள்ள எத்தனை செவ்வகங்களை உயர்ந்த பட்சம் வெட்டலாம்?




(1) 24 (2) 27 (3) 28

34. நாளொன்றின் செங்கோணத்தை காட்டக்கூடிய கடிகார நேரங்களுக்கு இடையிலுள்ள வித்தியாசமானது?

(1) ஒரு செங்கோண நேரமாக அமையும்.
(2) ஒரு செங்கோணத்தை விட குறைந்த கோணமாக காணப்படும்.
(3) ஒரு நேர்கோணமாக அமையும்.

www.ikedu.lk

35.





